விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

NORTHERN UNI
SLIIT உயர்கல்வி நிறுவனத்தின்
BSC (Hons) in IT
&
BBA (Hons)
இளமாணி பட்டப்படிப்புகளுக்கான
அனுமதிகள் ஆரம்பம் - 2025
(C-2838)
021 7534 807

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 131 வள்ளுவர் ஆண்டு 2056 சித்திரை 16 செவ்வாய்க்கிழமை (29.04.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

முல்லைத்தீவு மாவட்டத்தில்

## வித்தியானந்தா மாணவி உயிரியலில் முதலிடம்



(முல்லைத்தீவு)

வெளியாகியுள்ள க.பொ.த உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் உயிரியல் பிரிவில் முள்ளிய வளை வித்தியானந்தாக் கல்லூரி மாணவி விக்னேஸ்வரன் நர்த்திகா மாவட்ட ரீதியில் முதலிடம் பெற்றுள்ளார். (ம-7,4)

கணிதப் பிரிவில்

## இந்து மாணவன் அகரன் சாதனை



15ஆம் பக்கம் பார்க்க

## மன்னார் சித்திவிநாயகர் பாடசாலை மாணவி

### கலைப்பிரிவில் மாவட்ட ரீதியில் முதலிடம்



(மன்னார்)

உயர்தரப் பரீட்சையில் கலைப்பிரிவில் மன்னார் சித்திவிநாயகர் இந்து தேசிய பாடசாலை மாணவி ஜெயந்தன் பவதாரணி முதல் இடம் பிடித்து சாதனை படைத்துள்ளார்.

2024ஆம் ஆண்டு 15ஆம் பக்கம் பார்க்க

# அரசின் நடவடிக்கைகளால் நாடு ஸ்தம்பித்துள்ளது

### பெரமுனவின் செயலாளர் சாகர காரியவசம் குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஜனாதிபதி அநுர குமார திஸா நாயக்க தலைமையிலான அரசாங்கத்தின் நடவடிக்கைகளால் நாடு ஸ்தம் பித்துள்ளது என பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் குற்றம் சாட்டியுள்ளார்.

(02ஆம் பக்கம் பார்க்க)



## கிளிநொச்சியில் உப்புக்கு தட்டுப்பாடு?

(கிளிநொச்சி)

அண்மைக்காலமாக கிளிநொச்சி மாவட்டத்தில் உப்புக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகத் தெரியவரு கின்றது.

இதன் காரணமாக சில வர்த்தக நிலையங்களில் ஒரு கிலோ உப்பு மாத்திரமே ஒருவருக்கு வழங்கப்பட்டு

15ஆம் பக்கம் பார்க்க

## வட மாகாண விவசாய போதனாசிரியர்கள் நாளை சுகவீன விடுமுறைப் போராட்டம்

11ஆம் பக்கம் பார்க்க

## பக்கச்சார்பாகப் பொலிஸார் நயினாதீவில் மக்கள் போராட்டம்



(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறைப் பொலிஸார் பக்கச்சார்பாக நடந்து கொள்கின்றனர் எனத் தெரிவித்து நயினா தீவு இறங்குதுறையில் நயினாதீவைச் சேர்ந்த பொதுமக்கள் நேற்று கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இச்சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

15ஆம் பக்கம் பார்க்க

## தபால்மூல வாக்களிப்பு இன்றுடன் நிறைவு

### இனி கால அவகாசம் வழங்கப்படாது தேர்தல்கள் ஆணைக்குழு

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றத் தேர் தலுக்கான தபால்மூல வாக் கெடுப்பு இன்றுடன் (29) நிறை வடைகிறது.

இதுவரையான காலப்பகுதி யில் வாக்களிக்காத அரச உத்தியோகத்தர்கள் இன் றைய தினம் தவறாமல் வாக்

15ஆம் பக்கம் பார்க்க

## எரிகாயங்களுக்குள்ளான இளம் குடும்பப் பெண் மரணம்

### இணுவிலில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

இணுவிலில் எரிகாயங் களுக்குள்ளான இளம் குடும் பப் பெண் ஒருவர் நேற்று மரணமடைந்துள்ளார்.

இதில் அதே பகுதியைச் சேர்ந்த நிவேதனன் விஜிதா (வயது-30) என்ற இளம் குடும் பப்பெண்ணே மரணமடைந்த வராவார்.

நேற்று முன்தினம் (27) காலை 10 மணியளவில் மண் ணெண்ணெய் ஊற்றி தனக்

15ஆம் பக்கம் பார்க்க

தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு முதுகெலும்பு இருந்தால்

## தேர்தல் சட்டத்தை மீறிய பிரதமர் மீது விசாரணை நடத்துக - சுமந்திரன்

(கொழும்பு)

தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு முதுகெலும்பு இருந்தால் தேர்தல் சட்டத்தை மீறிய பிரதமர் ஹரிணி மீது விசாரணை நடத்துமாறு முன் னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் கோரிக்கை விடுத் துள்ளார்.


நேற்று முன்தினம் தேர் தல் பிரசாரத்தில் உரை யாற்றும்போதே இவ்வாறு



15ஆம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கஞ்சா, வாள்களுடன் இளவாலையில் மூவர் கைது



யாழ்ப்பாணம் இளவாலைப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மாதகல் பகுதியில் கஞ்சா மற்றும் வாள்கள் என்பவற்றுடன் மூவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது நிலத்தில் புதைத்து வைக்கப்பட்டிருந்த 2 கிலோ 600 கிராம் கஞ்சாவும் மூன்று வாள்களும் ஒரு கூரிய ஆயுதமும் மீட்கப்பட்டன.

சந்தேகநபர்கள் மூவரும் இளவாலைப் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டனர்.

விசாரணைகளின் பின்னர் அவர்களை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-4,7)

# ரூ.35 இலட்சம் பெறுமதியான மதுபான போத்தல்களுடன்

## கட்டுநாயக்காவில் 5 பேர் கைது

சட்டவிரோதமாகக் கொண்டுவரப்பட்ட 35 இலட்சம் ரூபா பெறுமதியான வெளிநாட்டு மதுபானப் போத்தல்களுடன் வர்த்தகர்கள் ஐவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து விமான நிலைய சுங்க அதிகாரிகளால் நேற்று திங்கட்கிழமை (28) காலை கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் கொழும்பு பிரதேசத்தைச் சேர்ந்த வர்த்தகர்கள் ஆவர்.

சந்தேக நபர்கள் ஐவரும் துபாயிலிருந்து நேற்று காலை 08.35 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

இதன்போது, விமான நிலைய சுங்க அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் சந்தேகநபர்கள் கொண்டு வந்த பயணப் பொதிகளிலிருந்து 234 வெளிநாட்டு மதுபான போத்தல்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. (ம-4,7)

## அரசின்...

நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அதன்போது மேலும் உரையாற்றிய பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம், இந்த நாடு வேலை செய்வதற்கு ஒரு சிறந்த இடமாக இருந்தது. இந்த நாடு வேகமாக வளர்ந்து வரும் நாடாக இருந்தது, ஆனால் தற்போது ஸ்தம்பிதமடையச் செய்துள்ளனர்.

இதனை ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தலைமையிலான அரசாங்கமே இதனைச் செய்துள்ளது.

இவ்வாறு செய்வதற்கு, அவர்கள் இரண்டு விடயங்களைப் பயன்படுத்தினர், ஒன்று சமூகத்தில் பொய்களைப் பரப்புவது. மற்றொன்று அந்தப் பொய்கள் மூலம் மக்களை ஏமாற்றுவது.

எனவே இந்த நாட்டை முன்னோக்கி எடுத்துச் செல்ல விரும்பினால், இந்த நாட்டில் தங்கள் எதிர்காலத்தை நேசிக்கும் மக்கள், ஒரு நாடு பொய் சொல்வதன் மூலமும், மற்றவர்களை வெறுப்பதன் மூலமும், உழைக்கும் மக்களை விமர்சிப்பதன் மூலமும் முன்னேறாது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும் என்றார். (ம-4,7)


## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் உதவி அதிபர்
திருமதி குமுதா குமணன்
அவர்களின் தந்தை



அமரர் மயில்வாகனம் சண்முகநாதன்

அவர்களின் பிரிவால் துயருறும்
குடும்பத்தினருக்கும்
உறவுகளுக்கும்
எமது அனுதாபங்களைத்
தெரிவித்துக் கொள்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

ஆசிரியர் நலன்புரிக் கழகம்
யா/ மகாஜனக் கல்லூரி,
தெல்லிப்பளை.
(C-2841)

## வேலைவாய்ப்பு

யாழில் உள்ள பிரபல கட்டிட நிறுவனம் ஒன்றிற்கு
Technical Officer, Site Supervisor
தேவை. உங்கள் சுயவிபரக்கோவையினை
அனுப்பி வைக்கவும்.
lionengineering9@gmail.com
076 200 4827
(4057)

## Biology Class


A/L 2027, 2026, 2025 & 2025
Day Batch, Group & Personal
Classes, Tamil Medium
ஆசிரியர் MR.S.Nithiananthan
(B.Sc, PGDE, MEd), (யா/ மகாஜனக் கல்லூரி)
T.P : 077 256 8522
(C-2842)

## தேவை

யாழில் உள்ள உணவகம்
ஒன்றுக்கு முழுநேர அல்லது
பகுதிநேர வேலையாட்கள்
தேவை.
077 201 7824
(4059)


## மரண அறிவித்தல்

மலர்வு 17 - 12 - 1951



உதிர்வு 28 - 04 - 2025

### திரு.விநாயகசிவம்பிள்ளை சதாசிவம் (பண்டிதன்)

காரைநகர் தங்கோடையைப் பிறப்பிடமாகவும் நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட விநாயகசிவம்பிள்ளை சதாசிவம் (பண்டிதன்) அவர்கள் நேற்று 28.04.2025 திங்கட்கிழமை அன்று சிவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விநாயகசிவம்பிள்ளை - தெய்வானை தம்பதியினரின் கனிஷ்ட புத்திரனும் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - தையல்முத்து தம்பதியினரின் மருமகனும் காலஞ்சென்ற சௌந்தராம்பிகையின் அன்புக் கணவரும் கவிதா (பிரதேச செயலகம் - நல்லூர்), சிவறஞ்சன்(பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜெயகாந்தன் (மாவட்டச் செயலகம்) அவர்களின் அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர்களான சிவஞானவதி, பராசக்தி, சிவசிதம்பரம் மற்றும் சிவகௌரிஅம்மா, கற்பகவதி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 29.04.2025 செவ்வாய்க் கிழமை காலை 8.00 மணியளவில் நல்லூர்க் கோவில் வீதியில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

435/19, கோவில் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

தகவல்
குடும்பத்தினர்
(4061)

## 2ம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 16.07.1987

மறைவு 21.04.2023

### ஜெயந்திரன் நிஜந்தன்

(முன்னாள் முகாமைத்துவ உதவியாளர் –வடக்கு மாகாண சபை)

திதி - துதியை (29.04.2025)

ஈராண்டு கடந்ததுவே
நிஜந்தா நீ எமைப் பிரிந்து
பார்க்கும் இடமெங்கும் உன் வதனம்
கேட்பதெல்லாம் உன் பேச்சு
மறக்க முயன்று தோற்கிறோம்
விழிகளில் நீர் கோர்க்கிறோம்
மூத்தவனாய் எம் வாழ்வின்
முத்தாக வந்த மைந்தா!
முப்பத்து ஆறு வயதோடு
காலன் உன்னை கவர்ந்துவிட்டான்
ஈராண்டாய் தேம்புகிறோம்
ஈரவிழிகளுடன் வாடுகிறோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இல.05,
சபாபதி வீதி, உடுவில்.

நீங்கா நினைவுகளுடன்
குடும்பத்தினர்
(1065)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ‘வாவ்’ வைபவ்... வயசோ சிறிசு படைத்த சாதனையோ பெரிசு

## 38 பந்துகளில் 101 ஓட்டங்களை விளாசினர்
## குஜராத்தை பந்தாடியது ராஜஸ்தான்




**இளம் வீரர்**

ஒட்டுமொத்த "ரி20" அரங்கில் சதம் அடித்த இளம் வீரர் என வரலாறு படைத்தார் ராஜஸ்தான் அணியின் வைபவ் (14 வயது, 32 நாள், இந்தியா). விஜய் ஜோல் (18 வயது, 118 நாள், 2013, இந்தியா), பங்களாதேசின் பர்வேஸ் ஹொசைன் (18 வயது, 189 நாள்) அடுத்த இரு இடத்தில் உள்ளனர்.

பிரிமியர் போட்டியில்14 வயதான ராஜஸ்தான் வீரர் வைபவ் சூர்ய வன்ஷி அதிவேக சதம் விளாசி சாதனை படைத்தார். இதன் மூலம் ராஜஸ்தான் அணி 8 விக்கெட்டுக் களால் வெற்றி பெற்றது.

ராஜஸ்தானின் ஜெய்ப்பூர், சவாய் மான்சிங் மைதானத்தில் நேற்று நடந்த பிரிமியர் லீக் போட்டியில் ராஜஸ்தான் - குஜராத் அணிகள் மோதின.

நாணயச்சுழற்சியில் வென்ற ராஜஸ் தான் அணியின் தலைவர் ரியான் பராக், களத்தடுப்பைத் தேர்வு செய்தார்.

**சுப்மன் அரைச்சதம்**

குஜராத் அணிக்கு அணித் தலைவர் சுப்மன் கில், சாய் சுதர்சன் ஜோடி ஆரம் பம் கொடுத்தது. ரியான் பராக் பந்தில் (6.3 ஓவர்) இப்போட்டியின் முதல் சிக்சர் அடித்தார் சுப்மன். இவர், 29ஆவது பந்தில் அரைச்சதம் அடித்தார். இது, பிரி மியர் தொடரில் சுப்மனின் 24, இத் தொடரில் 4வது அரைச் சத மானது. முதல் விக்கெட்டுக்காக 93 ஓட்டங்கள் சேர்த்தபோது, சுதர்சன் (39) தீக்சன சுழலில் ஆட்டமிழந்தார்.

சந்தீப் சர்மா பந்தில் (11.4 ஓவர்) சுப்மன் ஒரு சிக்சர் அடிக்க, குஜராத் அணியின் ஓட்ட எண்ணிக்கை 100ஐ (105/1) கடந்தது. தொடர்ந்து ஓட்ட வேகத்தை அதிகரித்த சுப்மன், யுத்விர் வீசிய போட்டியின் 14ஆவது ஓவரில் இரண்டு சிக்சர் அடித்தார்.

**மிரட்டிய பட்லர்**

போட்டியின் 15வது ஓவரை வீசினார் ஹசரங்க. இதில் பட்லர் 6, 6, 4, 6 என தொடர்ந்து விளாச, மொத்தம் 24 ஓட்டங் கள் எடுக்கப்பட்டன. இத்தொடரின் ஒரு ஓவரில், குஜராத் அணி எடுத்த அதிகபட்ச ரன் இது. பட்லருக்கு "கம்பெனி" கொடுத்த சுப்மன், 50 பந்தில் 80 ரன் எடுத்த போது, தீக்சனா சுழலில் சிக்கினார்.

தன் பங்கிற்கு ஒரு சிக்சர் அடித்து உதவிய வாஷிங்டன் சுந்தர் (13 ஓட்., 8 பந்து) சந்தீப் சர்மா "வேகத்தில்" வீழ்ந்தார். ஆர்ச்சர் வீசிய கடைசி ஓவ ரில் டிவாட்யா (9) ஆட்டமிழக்க, பட்லர் 26 பந்துகளில் அரைச்சதம் எட்டினார். இத்தொடரில் பட்லர் அடித்த 4ஆவது அரைசதம் இது.

முதல் 10 ஓவர்களில் 92 ஓட்டங்கள் எடுத்த குஜராத் அணி, கடைசி 10 ஓவர் களில் 117 ஓட்டங்களைக் குவித் தது.

20 ஓவர்கள் நிறைவில் குஜராத் அணி 4 விக்கெட்டுக்களை இழந்து 209 ஓட்டங்களைக் குவித்தது.

பட்லர் (50), ஷாருக்கான் (5) ஆட்ட மிழக்காமல் இருந்தனர்.

**வைபவ் மிரட்டல்**

ராஜஸ்தான் அணிக்கு வைபவ் சூர்யவன்ஷி, ஜெய்ஸ்வால் ஜோடி மின்னல் வேக ஆரம்பம் கொடுத்தது. சிராஜ் வீசிய போட்டியின் 3வது பந்தில் சிக்சர் அடித்து தனது விளாசலை ஆரம்பித்தார், 14 வயது வீரர் வைபவ். இஷாந்த் பந்தில் சிக்சர் அடித்த ஜெய்ஸ்வால், சிராஜ் ஓவரில் 3 பவுண் டரிகள் அடித்தார்.

இஷாந்த் வீசிய 4வது ஓவரில் வைபவ், 2 சிக்சர்கள், 2 பவுண்டரி விளாச, மொத்தம் 28 ஓட்டங்கள் எடுக் கப்பட்டன. அடுத்த வந்த வாஷிங்டன் ஓவரில் 6, 6, 4 என அடித்து மிரட்டிய வைபவ், 17வது பந்தில் அரைச்சதம் அடித்தார்.

கரிம் ஜனத் வீசிய ஓவரின் (10), 6 பந்தில் 6, 4, 6, 4, 4, 6 என 30 ஓட்டங் கள் குவித்தார் வைபவ். ரஷித் கான் பந்தை சிக்சருக்கு அனுப்பிய இவர், 35 பந்தில் சதம் எட்டினார். வைபவ் 38 பந்தில்101 ரன்(ஸ்டிரைக் ரேட்265.78) எடுத்து, பிரசித் பந்தில் ஆட்டமிழந் தார்.

ஜெய்ஸ்வால் தன் பங்கிற்கு அரைச் சதம் அடித்தார். நிதிஷ் ராணா (4) ஏமாற்றிய போதும், ராஜஸ்தான் அணி 15.5 ஓவரில் 212/2 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது.

ஜெய்ஸ்வால் (70), ரியான் பராக்(32) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.(ம-7,4)

# சமநிலையில் முடிவடைந்தது வீரர்களின் துடுப்பாட்டப் போர்




வீரர்களின் போர் என வர்ணிக் கப்படும் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மற்றும் சுன்னாகம் ஸ்கந் தவரோதயக் கல்லூரி அணிகளுக்கு இடையிலான 23ஆவது வீரர்களின் போர் கிரிக்கெட் தொடர் நேற்று முன்தினம் சமநிலையில் நிறை வடைந்தது.

இரண்டு நாட்களை கொண்ட குறித்த கிரிக்கெட் தொடர் சனிக் கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழ மைகளில் யாழ்.சுன்னாகம் ஸ்கந்த வரோதயக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

போட்டியின் முதலாவது இனிங் ஸில், முதலில் துடுப்பெடுத்தாடிய சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல் லூரி அணி 71.3 பந்து பரிமாற்றங் களில் அனைத்து இலக்குகளையும் இழந்து 245 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.

ஸ்கந்தவரோதய அணி சார்பில் அதிகபட்சமாக எஸ்.தர்மிலன் 75 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டார்.

பந்துவீச்சில் மகாஜனக் கல்லூரி சார்பில் அதிக பட்சமாக யு.யோவல் றொசான் 3 , யு.தரணிகன், யு.துளசி கன் மற்றும் கே.கௌதமன் ஆகி யோர் தலா 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய மகாஜனக் கல்லூரி அணி 86.1 பந்து பரிமாற்றங்களில் அனைத்து இலக் குகளையும் இழந்து 242 ஓட் டங்களைப் பெற்றுக்கொண்டது.

மகாஜனக் கல்லூரி சார்பில் அதிகபட்சமாக யு.யோவல் றொசான் 84 , றியாஸ் முகமட் றியா 59 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத் தனர்.

பந்துவீச்சில் ஸ்கந்தவரோதய அணி சார்பில் அதிக பட்சமாக மகாலிங்கம் பிரணவன் மற்றும் சிறீகாந்தன் கிரிஷ்கேசன் ஆகியோர் தலா 4 மற்றும் சிவானந்தன் வசீகரன் 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

போட்டியின் இரண்டாது இனிங் ஸில், முதலில் துடுப்பெடுத்தாடிய ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி 4 இலக்குகளை இழந்து 54 ஓட் டங்களை பெற்றுக்கொண்ட வேளை யில் 23ஆவது வீரர்களின் போர் சமநிலையில் நிறைவடைந்தது.

தொடரின் ஆட்டநாயகனாகவும் சகலதுறை ஆட்ட வீரனாகவும் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி வீரர் யு.யோவல் றொசான், சிறந்த துடுப்பாட்ட வீரராக ஸ்கந்தவரோ தயக் கல்லூரி வீரர் எஸ்.தர்மி லனும், சிறந்த பந்து வீச்சாளராக ஸ்கந்தவரோதயா கல்லூரி வீரர் எம்.பிரணவனும் தெரிவுசெய் யப்பட்டனர். (6-8-90)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6 ஆம் ஆண்டு நினைவலைகள்

# கண்ணீருடன் ஒரு மடலை காணிக்கையாக்குகின்றோம்



அன்னை மடியில்
16.05.1994

இறைவன் அடியில்
29.04.2019

## அமரர். பாலசுப்பிரமணியம் கவிராஜ் (கவி)



காவியமாகிப் போன எங்கள் கவிக்கு
கண்ணீருடன் ஒருமடல் எழுதுகின்றோம்
கனத்த எங்கள் இதயத்துடன்
கனிவாய் நீ பழகிய உன் உறவுகள் நாம்

காவியமாகி நீ போனாலும் காலம் எல்லாம்
கண்ணீருடன் உன்னை நாம்
நினைக்கின்றோம் ஐயா!
உரத்த குரலில் பேசி அறிந்திடாய்- உன்
உள்ளத்தால் அனைவரையும் நேசித்தாய்

தாய் தந்தையர்க்கு நல்லதொரு தனயனாய்
சகோதரர்களுக்கு தங்கமான தம்பியாய்
சின்னவனுக்கு சிந்தை மகிழ்ந்த சித்தப்பாவாய்
ஊரவர்க்கு உதவிடும் நல்ல அயலவனாய்

மத்தியின் மைந்தனாய் என பன்முகத்
தன்மையுடையவனே!
"பிம்புத்" நிறுவனத்தின் பிரியமான
நண்பன் நீ
வாடிக்கையாளர் வாய்விட்டலறினரே
உன் இறப்பிலே
"வார்த்தையில் ஒரு கடினத்தன்மை
இல்லாதவனே எங்கள்

கஷ்ரங்களை அறிந்தவனே" என
இதைவிட
எதையடா நாம் உதாரணம் காட்ட முடியும்
காலங்கள் பல கடந்தாலும் ஆண்டுகள்
அடுக்கடுக்காய்
ஓடினாலும். ஒருபோதும் மறவோமையா!

உன் ஆத்மா சாந்திபெற வேண்டுமென
உதரத்தில் சுமந்தவளும், உதிரத்தால்
ஒன்று பட்டவர்களும்
உள்ளத்தால் வேண்டி உனக்கான
மடலை முடிக்கின்றோம்.

(1074)

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

சோலைபுரம், கொட்டடி,
யாழ்ப்பாணம்.

உன் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.
T.P-077 386 8675

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரியின் இரண்டாவது கல்வி ஆராய்ச்சி கருத்தரங்கு நாளை புதன்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரியின் சரஸ்வதி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரியின் தலைவர். ர.லோகேஸ்வரன் தலைமையில் இடம்பெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத் துணைவேந்தர் சி.சிறீசற்குணராஜா, சிறப்புரையாளராக யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் கல்வித் துறையின் தலைவர் அ.நித்லவர்ணன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (நி-3-8)

# இரட்டைக் கொலை வழக்கு நிபந்தனைகளுடன் ஐவருக்கு பிணை

## வவு.மேல் நீதிமன்றம் உத்தரவு

(குருமன்காடு)

வவுனியா, தோணிக்கல் பகுதியில் இடம்பெற்ற இரட்டை கொலைச் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட 5 சந்தேக நபர்களுக்கு பிணை வழங்கி வவுனியா மேல்நீதிமன்ற நீதிபதி எம்.எம்.எம்.மிஹாஸ் உத்தரவிட்டார்.

தோணிக்கல் பகுதியில் கடந்த 2023 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 23 ஆம் திகதி அதிகாலை வீடு புகுந்து தாக்குதல் நடத்தி பெற்றோல் ஊற்றி எரியூட்டப்பட்ட சம்பவத்தில் கணவன், மனைவி ஆகிய இருவர் மரணமடைந்திருந்தனர்.

குறித்த இரட்டை கொலை சம்பவத்துடன் தொடர்புபட்ட சந்தேகத்தின் அடிப்படையில் 6 பேர் வவுனியா பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விசாரணைகளை முன்னெடுத்து நீதிமன்ற உத்தரவுக்கமைய தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ள பிரதான சந்தேக நபரின் சார்பில் ஆஜரான சட்டத்தரணி சந்தேக நபர்கள் சார்பில் மேல் நீதிமன்றில் பிணை கோரி பிணை மனுவை சமர்ப்பித்திருந்தார்.

சட்டமா அதிபர் திணைக்களத்தினால் விசேட காரணங்கள் முன்வைக்கப்படாமையால் கைது செய்யப்பட்டவர்களுக்கான விளக்கமறியலை நீடிக்க காரணம் போதாமையால் குறித்த சந்தேக நபர்களுக்கு பிணை வழங்கலாம் என நீதிபதி உத்தரவிட்டிருந்தார்.

அதற்கமைவாக நேற்று குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய முதலாம், மூன்றாம், நான்காம், ஆறாம், ஒன்பதாம் இலக்க சந்தேக நபர்கள் 5 பேருக்கும் நிபந்தனைகளுடன் கூடிய பிணை வழங்கப்பட்டது. ஒவ்வொருவரும் 50 ஆயிரம் ரூபாய் காசு பிணை மற்றும் 5 இலட்சம் ரூபாய் பெறுமதியான இரண்டு சரீரப் பிணை வழங்கி நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

மாதாந்தம் கடைசி ஞாயிறுக்கிழமை காலை 9 மணி தொடக்கம் மதியம் 12 மணிக்கு இடையில் வவுனியா தலைமைப் பொலிஸ் நிலையத்தில் தமது வரவை பதிவு செய்ய வேண்டும் எனவும், சந்தேக நபர்களுக்கு நீதிமன்ற அனுமதியின்றி வெளிநாடு செல்ல தடை விதிக்கப்பட்டதுடன், இது தொடர்பில் குடிவரவு- குடியகல்வு திணைக்களத்திற்கு அறிவிக்குமாறும் வவுனியா நீதிவான் நீதிமன்ற பதிவாளருக்கு அறிவிக்கும் படியும் மேல் நீதிமன்ற நீதிபதி உத்தரவு பிறப்பித்தார். (6-8-280)

1978 முதல்
ஈ ச ன் ஸ்
இல.148,
பிரதான வீதி,
யாழ்ப்பாணம்
021 222 2695
077 429 0613
(சி-2034)

## மணல் ஏல விற்பனை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றத்தில் இன்று செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு நீதிமன்ற வளாகத்தில் 62 டிப்பர் மணல் ஏல விற்பனை இடம்பெறவுள்ளது என கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றப் பதிவாளர் அறிவித்துள்ளார். (6-8)

## கண்ணீர் காணிக்கை



எமது பாடசாலை ஆசிரியை
திருமதி.கல்யாணி அரவிந்தன்
அவர்களின் பாசமிகு தந்தை


அமரர். **சின்னத்துரை தியாகராஜா**

பிறப்பு 08.07.1939 இறப்பு 26.04.2025

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம். (4056)

பிரிவால் துயருறும்
ஆசிரியர் நலன்புரிக் கழகம்
யா/உயரப்புலம் மெதடிஸ் மிஷன் வித்தியாலயம்.

## கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 1939.07.08 மறைவு 2025.04.26

எங்கள் வித்தியாசாலையின்
ஆசிரியர் திரு.கு.அரவிந்தன்
அவர்களின் பாசமிகு மாமனார்

அமரர். **சின்னத்துரை தியாகராஜா**

(ஓய்வு பெற்ற விவசாயத் திணைக்கள உத்தியோகத்தா)

அவர்களின் மறைவால் துயரடைகின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திப்பதோடு துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த இரங்கல்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம். (4050)

ஆசிரியர் நலன்புரிக்கழகம்
யா/கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாசாலை.

## இராசிபலன்

29.04.2025
சித்திரை 16, செவ்வாய்க்கிழமை
துதியை முன்னிரவு 8.54 மணிவரை
கார்த்திகை முன்னிரவு 9.59 மணிவரை

சுபநேரம் 10.28-11.58 மணிவரை
இராகுகாலம் 2.58-4.28 மணிவரை
கார்த்திகை விரதம்
சித்தாமிர்தம்

சந்திராஷ்டமம்- சித்திரை, சுவாதி.

வளவன்

**மேஷம்** சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ள அழைப்புக்கள் வந்து சேரலாம், காலைப் பொழுதே கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம், பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும்.

**ரிஷபம்** உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுபவரை இனங்கண்டு கொள்வீர்கள், விரதம் வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், பெரிய மனிதர்களின்தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**மிதுனம்** அன்பு நண்பர்களின் சந்திப்புகள் இடம்பெறலாம், எடுத்த செயலை நிறைவேற்ற அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்,

**கடகம்** மற்றவர்கள் கடுமையாக நினைக்கும் வேலையொன்றை நீங்கள் எளிதாக செய்து முடிப்பீர்கள், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, பொருளாதார நிலையில் முன்னேற்றமுண்டு.

**சிம்மம்** கொள்கைப்பிடிப்போடு செயற்படுவீர்கள், பணியில் தீவிரம் காட்டுவீர்கள், மற்றவர்களின் ஒத்துழைப்புக் கிடைக்கும், செய்தொழில் மேன்மையுண்டு, போசன சுகமுண்டு.

**கன்னி** தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், பிரிந்து சென்றவர்கள் பிரியமுடன் வந்திணைவர், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம், ஆன்றோர் சந்திப்புண்டு.

**துலாம்** சில பிரச்சினைகளைக் கண்டும் காணாமல் இருப்பது நல்லது, விரயங்கள் மேலோங்கும் நாள், மறதியால் சில தொல்லைகளுக்கு ஆட்பட நேரிடலாம்.

**விருச்சிகம்** திடீர் பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, விரதம் வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறும் வாய்ப்புண்டு.

**தனுசு** புகழ்மிக்கவர்களின் சந்திப்பு இடம் பெறலாம், இனத்தார் பகை மாற எடுத்த முயற்சிகள் கைகூடும்,வியாபார விரோதம் விலகும், கடன்சுமை குறைய வழிவகை செய்வீர்கள்.

**மகரம்** வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, பணியில் தீவிரம் காட்டுவீர்கள், சுப செய்திகள் வந்து சேரலாம், ஏட்டிக்குப் போட்டியாக செயற்பட்டவர் மனம் மாறுவர்.

**கும்பம்** வளர்ச்சிப் பாதைக்கு நண்பர்களின் ஒத்துழைப்புக் கிடைக்கும், பெற்றோர் மீது பிரியம் கூடும், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம்,கௌரவமான நாள்.

**மீனம்** பகை விலகி பாசம் கூடும், முத்தான வாய்ப்புகள் இல்லம் வந்து சேரலாம், தொழில் முயற்சியில் எதிர்பார்த்த சில நல்ல திருப்பங்களைக் காணலாம், போசன சுகமுண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளை சமூக வலைத்தளங்களில் பகிர்வதைத் தவிருங்கள்!

## பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அறிவுறுத்து

(கொழும்பு)

**உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளை சமூக வலைத்தளங்களில் பகிர்வதைத் தவிர்க்குமாறு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க அறிவித்துள்ளார்.**

சமூக வலைத்தளங்களில் பெறுபேறுகளை வெளியிடும்போது உரிய நபரின் சுட்டெண் வேறு நபர்களிடம் சென்றடைந்தால் அதனைக் கொண்டு வேறு நபர்கள் பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிப்பதற்குச் சந்தர்ப்பங்கள் ஏற்படும் என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

அதனைக் கணினி முறைமையில் இருந்து அகற்றி உரிய நபர்கள் விண்ணப்பிப்பதற்கு மீள ஏற்பாடுகள் செய்வதற்கு நீண்ட நாட்கள் எடுக்கும். எனவே உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளை சமூக வலைத்தளங்களில் பகிர்வதைத் தவிர்த்துக் கொள்ளுமாறு அறிவுறுத்தியுள்ளார். (நி-8)

# ஜனாதிபதி அநுர வியட்நாம் விஜயம்

(கொழும்பு)

மே முதல் வாரத்தில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க வியட்நாமுக்கு விஜயம் செய்யவுள்ளதாக கொழும்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

ஐ.நா. வெசாக் தின நிகழ்வில் பங்கேற்பதற்காகவே அவர் வியட்நாமுக்கு செல்லவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.



ஐ.நா. வெசாக் தின நிகழ்வுகள் எதிர்வரும் மே 6 ஆம் திகதி முதல் 8 ஆம் திகதிவரை ஹோ சி மின் நகரில் நடைபெறவுள்ளது.

85 நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் உட்பட 2700 விருந்தினர்கள் பங்கேற்கவுள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை, இந்தியா, கம்போடியா, நேபாளம், லாவோஸ் ஆகிய நாடுகளில் இருந்து உயர்மட்டத் தலைவர்கள் பங்கேற்பார்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கையால் முன்வைக்கப்பட்ட கோரிக்கையின் பிரகாரமே ஐ.நா. வெசாக் தினம் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

# 3 மணி நேர வாக்குமூலம் வழங்கிய ரணில் விக்கிரமசிங்க


(கொழும்பு)

இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவுக்கு நேற்றைய தினம் விசாரணைக்காகச் சென்றிருந்த முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மிக நீண்ட வாக்குமூலத்தினை வழங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சுமார் 10 பக்கங்களுக்கான வாக்குமூலத்தினை மூன்று மணி நேரமாக முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதன்போது வழங்கியுள்ளார்.

ஊவா மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சர் சாமர சம்பத் தசநாயக்க முதலமைச்சராக இருந்த போது நடந்த மோசடிச் சம்பவம் தொடர்பில் ரணில் விக்கிரமசிங்கவிடம் வாக்குமூலம் பெறப்பட்டுள்ளது.

இந்த மோசடி தொடர்பில் ஏற்கனவே சாமர சம்பத் தசநாயக்க கைது செய்யப்பட்டு சிறையில் வைக்கப்பட்டுள்ள நிலையில், அது குறித்து முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வெளியிட்ட அறிக்கைக்கமைய அவர் இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவுக்கு விசாரணைக்காக அழைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-8)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தயார் நிலையில் அணு ஆயுதங்

# தொடர்ந்து மிரட்டும் பாகிஸ்தா

**(இஸ்லாமாபாத்)**

**கோரி, ஷாஹீன், கஸ்னவி ஏவுகணைகள் மற்றும் 130 அணு ஆயுதங்கள் இந்தியாவைத் தாக்கத் தயாராக உள்ளதாக பாகிஸ்தான் அமைச்சர் ஹனிஃப் அப்பாஸி தெரிவித்துள்ளார்.**

அந்த ஆயுதங்கள் இந்தியாவுக்காக மட்டுமே நாட்டின் பல்வேறு பகுதிகளில் வைக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த 22 ஆம் திகதி அன்று ஜம்மு காஷ்மீரின் பஹல்காமில் பயங்கரவாதிகள் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் சுற்றுலாப் பயணிகள் 26 பேர் உயிரிழந்தனர்.

பயங்கரவாதிகளின் இந்தத் தாக்குதல் தேசம் முழுவதும் அதிர்ச்சியை ஏற்படுத்தி இருந்தது.

தீவிரவாதத்துக்கு புகலிடம் அளிக்கும் பாகிஸ்தானை வழிக்குக் கொண்டுவர, சிந்து நதி நீர்ப் பங்கீடு ஒப்பந்தத்தை நிறுத்துவது உள்ளிட்ட 5 முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன.


இந்நிலையில், பாகிஸ்தான் அமைச்சர் ஹனிஃப் அப்பாஸி கூறியதாவது: "பாகிஸ்தானுக்கு தண்ணீர் வழங்குவதை நிறுத்தினால், அவர்கள் போருக்குத் தயாராக இருக்க வேண்டும்.

எங்களிடம் உள்ள இராணுவ உபகரணங்கள், ஆயுதங்கள், அணு ஆயுதங்கள் மற்றும் ஏவுகணைகள் வெறும் கண்காட்சிக்கானது அல்ல.

நாடு முழுவதும் பல்வேறு இடங்களில் 130 அணு ஆயுதங்கள் வைக்கப்பட்டுள்ளன.

அவை எங்கு உள்ளன என்று யாருக்கும் தெரியாது. இந்த அணு ஆயுதங்கள் அனைத்தும் இந்தியாவை மட்டுமே குறிவைத்து நிறுத்தப்பட்டுள்ளன" என தெரிவித்தார்.

எல்லை தாண்டிய தீவிரவாதத்துக்கு ஆதரவு அளிப்பதை பாகிஸ்தான் நிறுத்தும் வரை, இந்தியா - பாகிஸ்தான் இடையே கடந்த 1960 ஆம் ஆண்டு செய்து கொண்ட சிந்து நதி நீர்




ஒப்பந்தம் நிறுத்தி வைக்கப்படுவதாக மத்திய அரசு அறிவித்தது.

இத... நீர் த... உருவ...

## காலக்கெடு நிறைவு

# இந்தியாவை விட்டு

## வெளியேறிய பாகிஸ்தானியர்கள்




(டில்லி)

இந்தியாவில் தங்கியிருக்கும் பாகிஸ்தானியர்கள் நாட்டைவிட்டு வெளியேறுவதற்கான காலக்கெடு நேற்று முன்தினத்துடன் நிறைவடைந்த நிலையில் அட்டாரி வழியாக பாகிஸ்தானியர்கள் தமது சொந்த நாட்டிற்குத் திரும்பிச் சென்றனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை பஹல்காமில் நடந்த கொடூரத் தாக்குதலில் 26 பேர் கொல்லப்பட்ட நிலையில் இந்தியா, பாகிஸ்தானியர்களுக்கான விசாக்களை ரத்து செய்வது உள்ளிட்ட முக்கிய முடிவுகளை எடுத்தது.

அதன்படி சார்க் விசாக்கள் கடந்த 26 ஆம் திகதியுடன் நிறைவடைந்தது. மேலும் சில விசாக்கள். நேற்று முன் தினத்துடன் முடிவடைந்தன.

மருத்துவ விசாக்கள் மட்டும் இன்று 29 ஆம் திகதி வரை செல்லுபடியாகும். இந்த முடிவுகளால் இரு நாடுகளுக்கும் இடையே பதற்றம் ஏற்பட்டுள்ளது.

இந்தியாவில் உள்ள பாகிஸ்தானியர்கள் வெளியேறுவதற்கான காலக்கெடு நிறைவடைந்த நிலையில் அமிர்தரஸில் உள்ள வாகா - அட்டாரி சோதனைச் சாவடி வழியாக பாகிஸ்தானியர்கள் தமது சொந்த நாட்டிற்குத் திரும்பிச் சென்றனர்.

அவர்களின் இந்திய உறவினர்களும் அட்டாரி எல்லைக்கு வந்து வெளியேறுபவர்களை வழியனுப்பி வைத்தனர்.

காலக்கெடுவுக்குள் வெளியேறாத பாகிஸ்தானியர்கள் மீது புதிய குடியுரிமை மற்றும் வெளிநாட்டினர் சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்று இந்தியா தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-8)



40...

ன...



(ல... மை... குள்ள... நாட்க... ஒருவ... இருப...

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

...பகள்
...கோன்!



இதன் காரணமாக பாகிஸ்தானில் ...ீர் தட்டுப்பாடு ஏற்படும் நிலை ...ருவாகியுள்ளது. (நி-8)

## ரஷ்யாவிற்காக படைகளை அனுப்பிய வடகொரியா

### பகிரங்கமாக ஒப்புதல்



(பியாங்யாங்)

உக்ரைனுக்கு எதிராக ரஷ்யாவுக்காகப் போரிடப் படைகளை அனுப்பியதை வடகொரியா முதல்முறையாக உறுதிப்படுத்தியுள்ளது.

வடகொரியாவின் அரசு செய்தி நிறுவனமான KCNA-வில் வெளியான ஒரு அறிக்கையில், வட கொரியா ஜனாதிபதி கிம் ஜாங் உன் பிறப்பித்த உத்தரவின்படி, குர்ஸ்க் எல்லைப் பகுதியில் உள்ள ரஷ்யப் படைகளை “முழுமையாக விடுவிக்க” தங்கள் வீரர்கள் உதவியதாக பியாங்யாங்கின் இராணுவம் தெரிவித்தது.

வடகொரிய வீரர்களின் “வீரத்தை” ரஷ்ய தலைமைத் தளபதி வலேரி ஜெராசிமோவ் பாராட்டிய சில நாட்களுக்குப் பின்னர் பியாங்யாங்கின் இந்த அறிவிப்பு வெளிவந்துள்ளது.

மொஸ்கோ முதல் முறையாக போரில் வடகொரியாவின் ஈடுபாட்டைப் பகிரங்கமாக ஒப்புக்கொண்டது.


வடகொரியாவிலிருந்து அனுப்பப்பட்ட 11,000 வீரர்களில் குறைந்தது ஆயிரம் பேர் மூன்று மாதங்களில் உயிரிழந்துள்ளதாக மேற்கத்திய அதிகாரிகள் முன்னதாகக் கூறியிருந்தனர்.




தென்கொரிய மற்றும் மேற்கத்திய உளவுத் துறை, கடந்த ஆண்டு வடகொரியா குர்ஸ்க்கு ஆயிரக்கணக்கான வீரர்களை அனுப்பியதாக நீண்டகாலமாக செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த நிலையில் வட கொரியாவின் புதிய அறிவிப்பின்படி, பியாங்யாங் மற்றும் மொஸ்கோ இடையேயான பரஸ்பர பாதுகாப்பு ஒப்பந்தத்தின்படி வீரர்களை அனுப்ப முடிவு செய்யப்பட்டதுஎன்று KCNA தெரிவித்துள்ளது. (நி-8)

## 400,000 டொலர்களுக்கு ஏலம் போன டைட்டானிக் பயணியின் கடிதம்








(லண்டன்)

டைட்டானிக் கப்பல் விபத்துக்குள்ளாகி மூழ்குவதற்கு சில நாட்களுக்கு முன்பு அதில் பயணித்த ஒருவர் எழுதிய கடிதம் இங்கிலாந்தில் நடந்த ஏலத்தில் சுமார் 400,000 அமெரிக்க டொலர்களுக்கு விற்கப்பட்டு சாதனை படைத்துள்ளது.

கர்னல் ஆர்ச்சிபால்ட் கிரேசி என்ற பயணியின் கடிதம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை வில்ட்ஷயரில் உள்ள ஹென்றி ஆல்ட்ரிட்ஜ் மற்றும் சன் ஏல நிறுவனத்தில் உள்ள ஒருவரால் வாங்கப்பட்டது.

இது எதிர்பார்க்கப்பட்ட விலையை விட ஐந்து மடங்கு அதிக விலைக்கு ஏலம் போயுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அந்தக் கடிதம் 1912 ஏப்ரல் 10 ஆம் திகதி, அவர் சவுத்தாம்ப்டனில் டைட்டானிக் கப்பலில் ஏறிய நாளிலும், வடக்கு அட்லாண்டிக்கில் ஒரு பனிப்பாறையில் மோதி அது மூழ்குவதற்கு ஐந்து நாட்களுக்கு முன்பும் எழுதப்பட்டுள்ளது. (நி-8)

## டில்லியில் தீ விபத்து!

- 2 குழந்தைகள் உயிரிழப்பு
- பலர் காயம்
- 800 குடிசைகள் தீக்கிரை



(டில்லி)

இந்தியத் தலைநகர் புது டில்லியிலுள்ள குடிசைப் பகுதியில் நேற்று முன்தினம் பாரிய தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

இந்தத் தீ விபத்தில் 2 குழந்தைகள் உயிரிழந்துள்ளதுடன் பலர் காயமடைந்துள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.


இரண்டரை வயது மற்றும் மூன்று வயதுடைய இரண்டு குழந்தைகளே சம்பவத்தில் உயிரிழந்தனர்.

அத்துடன் தீ விபத்தில் 800 இற்கும் மேற்பட்ட குடிசைகள் தீக்கிரையாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

எனினும் தீ விபத்துக்கான காரணம் இதுவரையில் வெளியாகவில்லை. (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாணத்தின் குடித்தொகை வேறுபாடுகளும், குடியடர்த்தியும், குடிப்பரம்பலும் 1871 - 2022



05

வாழ்நாள் பேராசிரியர். பொன். பாலசுந்தரம்பிள்ளை
முன்னாள் துணைவேந்தர், யாழ். பல்கலைக்கழகம்.

மேலும் 1970களில் மலையை கப்பகுதியில் ஏற்பட்ட உணவுப் பஞ்சத்தாலும் ஒரு தொகையினர் இம் மாவட்டத்திற்கு இடம்பெயர்ந்தனர்.

அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடை பெற்ற யுத்த இறுதியில் முள்ளி வாய்க்காலில் திரண்ட மக்கள் யாவரும் செட்டிகுளத்தில் அமைக் கப்பட்ட இராமநாதன் குடியிருப்பு, மெனிக்பாம் குடியிருப்பு எனப் பல தற்காலிகக் குடியிருப்புக்களில் தங்க வைக்கப்பட்டிருந்து பின்னர் அவர வர் மாவட்டத்திற்கு அனுப்பப்பட் டாலும் சிறு தொகையினர் செட்டி குளம் பிரிவில் குடியேறியிருக்கின் றார்கள். வவுனியா நகரத்தில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பல குடும்பங்கள் நிரந்தரமாகக் குடியேறி னர். 1980, 1990களில் இந்நகரம் முக் கிய வர்த்தக, நிதி மற்றும் போக்கு வரத்து மையமாக வளர்ந்தது.

வடபகுதியில் ஏற்பட்ட யுத்த நிலையினால் யாழ்ப்பாணம், வன்னிப் பிரதேசங்களில் இருந்து பெரும் எண்ணிக்கையிலானோர் வவுனியா நகரப் பகுதியில் குடியேறி யதால் அவர்களின் குடித்தொகை பெரிதும் அதிகரித்தது. மேலும் வவுனியா வளாகம், கல்வியல் கல்லூரி மற்றும் பல்வேறு நிறுவ னங்கள் வவுனியாவில் அமையப் பெற்றதால் நகர் குடியுள் வரவை ஈர்த்தது. யுத்த காலத்தில் வட பகு திக்கான பொருட்கள், சேவைகள் வழங்கும் முக்கிய நகரமாக வவு னியா மாறி பெரும் வளர்ச்சி பெற்றது. இந்நகர் போக்குவரத்து மையமாகவும், விவசாயம் சார் கைத்தொழில் துறையாகவும் வளர்ச்சி பெற்றதால் மக்கள் தொகை யும் அதிகரிக்கலாயிற்று. வவுனியா தெற்குப் பிரதேச செயலகப் பிரிவில் புதிதாக அமைக்கப்பட்ட போகஸ் வேவா I, போகஸ் வேவா II, நாமல்கம, நந்திமித்தரகம குடி யிருப்புகள் மூலம் வவுனியா மாவட் டத்தில் குடித்தொகை துரிதமாக அதிகரித்தது. வவுனியா நகரம் தற்பொழுது மாநகர அந்தஸ்தைப் பெற்று துரிதமாக வளர்ச்சி பெற்று வருவதால் மாவட்டக் குடித்தொகை எதிர்காலத்தில் அதிகரிக்க வாய்ப் புள்ளது.

### அட்டவணை VIII முல்லைத்தீவு மாவட்டத்தின் குடித் தொகை, குடிக்கணிப்பு இடையிலான வேறுபாடுகள் 1871 - 2022

| குடிக்கணிப்பு ஆண்டு | குடித்தொகை | குடிக்கணிப்பு இடை வேறுபாடு | | மாகாணக் குடித்தொகையில் மாவட்டத்தின் பங்கு |
|---|---|---|---|---|
| | | எண் | வீதம் | |
| 1871 | 7753 | ......... | ......... | 2.6 |
| 1881 | 7342 | -411 | -4.4 | 2.3 |
| 1891 | 7553 | -1211 | +2.9 | 2.4 |
| 1901 | 8319 | +766 | +10.1 | 2.4 |
| 1911 | 8308 | +289 | +3.5 | 2.3 |
| 1921 | 9342 | +734 | +8.5 | 2.5 |
| 1931 | 9360 | +18 | +0.2 | 2.3 |
| 1946 | 10801 | +1441 | +0.2 | 2.3 |
| 1953 | 16960 | +6159 | +15.4 | 3.0 |
| 1963 | 30250 | +13290 | +57.0 | 4.4 |
| 1971 | 43615 | +13365 | +41.2 | 5.0 |
| 1981 | 77189 | +33574 | +57.6 | 6.9 |
| 2001 | 1211667 | +44478 | +57.6 | 12.0 |
| 2012 | 91947 | +29720 | +24.4 | 8.0 |
| 2022 | 99174 | +7227 | +7.9 | 8.5 |

மூலம்: இலங்கைக் குடித்தொகைக்கணிப்புகள், மாவட்டப் புள்ளிவிபரக் கைந்நூல்கள்

முல்லைத்தீவு மாவட்டத்தில் 1871 தொடக்கம் 1946 இற்கு இடைப்பட்ட 75 வருட காலத்தில் குடி சனத் தொகை 3048 ஆல் மாத்திரமே அதிகரித்தது. அதிகரிப்பு 39.4 வீதம் ஆகும்.

1946இற்கு முன்னர் இம் மாவட்டம் பொருளாதார ரீதியில் மிகவும் பின் தங்கியிருந்ததுடன் மலேரியா நோயாலும் பெரிதும் பாதிக்கப்பட்டு இருந்தது. 1950களுக் குப் பின்னர் புதுக்குடியிருப்பு, துணுக்காய், மாந்தை கிழக்குப் பிரதேச செயலகப் பிரிவுகளில் மேற்கொள்ளப்பட்ட குடி யேற்றத் திட்டங்களாலும், சிறு நடுத்தரக் குளங்கள் புனரமைப் பாலும் விவசாய நடவடிக்கைகளில் முன்னேற்றம் ஏற்படலாயிற்று.

மேலும் வவுனிக்குளம் முத்தை யன் கட்டுக்குளக்குடியேற்றத்திட் டத்தில் பல குடும்பங்கள் குடியேற்ற ப்பட்டன. 2001இல் இம்மாவட்டம் 121 667 பேரைக் கொண்டி ருந்ததாக மதிப்பிடப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் முல்லைத்தீவு மாவட்டத்திற்குத் தற்காலிகமாக இடம் பெயர்ந்து இருந்ததால் மாவட்டத்தின் குடித் தொகை அதிகரித்து இருந்தது.

ஆனால் 2012இல் குறைந்து விட்டது என்பது குறிப்பிடத்தக்கது. முல்லைத்தீவு மாவட்டத்தில் வெலி ஓயா - மணல் ஆறுப் பிரதேசத்தில் ஏற்பட்ட சிங்களக் குடியேற்றத்தால் இப்பிரிவில் 2012இல் 6900 மக்கள் இருந்துள்ளனர்.

குடியேற்றத் திட்டம் மகாவலி அபிவிருத்தி அதிகார சபையின் புவிசார் அரசியல் நோக்கில் ஏற்படுத்தப்பட்டதாகும். முல்லைத் தீவு மாவட்டம் 2615 சதுர கிலோமீற் றர் நிலப்பரப்பைக் கொண்ட தாக இருந்தாலும் மிகச் சிறிய குடித் தொகையைக் கொண்ட மாவட்ட மாக இருப்பதுடன் மாவட்டத்தின் மொத்த நிலப்பரப்பில் 60 வீதத் திற்கு மேற்பட்ட நிலப்பரப்பு காட்டுப் பகுதியாக உள்ளது. (தொடரும்...)

### அட்டவணை IX - வடமாகாணத்தின் பிரதேச செயலகப் பிரிவுகளின் குடித்தொகை 1911 – 2022

| பிரதேச செயலகப் பிரிவு | பரப்பு சதுர கி.மீ | 2022 | 2012 | 1981 | 1971 | 1963 | 1953 | 1946 | 1931 | 1921 | 1911 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| நெடுந்தீவு | 45.0 | 4117 | 3819 | 5608 | 5607 | 5875 | 5921 | 5327 | 5147 | 4021 | 3728 |
| தீவுகள் வடக்கு | 30.0 | 10638 | 9997 | 19710 | 18034 | 15164 | 11798 | 10792 | 10631 | 9091 | 8068 |
| காரைநகர் | 22.0 | 10310 | 9544 | 17873 | 15765 | 14619 | 12345 | 11784 | 10389 | 9337 | 9718 |
| தீவுகள் தெற்கு | 78.0 | 18026 | 16525 | 38411 | 34375 | 31807 | 26260 | 23715 | 18325 | 16098 | 15704 |
| யாழ்ப்பாணம் | 17.38 | 54363 | 50759 | 81395 | 73622 | 122664 | 10025 | 82863 | 61815 | 663365 | 63378 |
| நல்லூர் | 78.0 | 73367 | 68048 | 78203 | 67950 | | | | | | |
| வலிகாமம் மேற்கு | 44.0 | 49999 | 46343 | 47720 | 43305 | 42437 | 35941 | 32575 | 27356 | 25997 | 25935 |
| வலிகாமம் தென்மேற்கு | 45.0 | 56277 | 52226 | 56657 | 48000 | 39769 | 33543 | 29517 | 24966 | 23407 | 21270 |
| வலிகாமம் தெற்கு | 30.0 | 57081 | 52633 | 54762 | 46068 | 40219 | 32422 | 28356 | 24157 | 21165 | 20549 |
| வலிகாமம் வடக்கு | 57.0 | 31781 | 29546 | 72448 | 61368 | 53438 | 47771 | 38455 | 31878 | 30539 | 29788 |
| வலிகாமம் கிழக்கு | 122.0 | 78840 | 73298 | 73143 | 62321 | 52932 | 43773 | 37432 | 31223 | 27615 | 26468 |
| தென்மராட்சி | 221.0 | 69665 | 64685 | 71543 | 62321 | 54967 | 44749 | 38247 | 34520 | 33952 | 38921 |
| வடமராட்சி தெற்கும் மேற்கும் | 88.0 | 49236 | 45628 | 62484 | 57097 | 49690 | 37195 | 32695 | 31200 | 27292 | 27685 |
| வடமராட்சி வடக்கு | 29.0 | 51212 | 47389 | 45586 | 39550 | 37019 | 36899 | 34423 | 28280 | 27483 | 25973 |
| வடமராட்சி கிழக்கு | 179.0 | 13745 | 12738 | 12343 | 10256 | 9222 | 6146 | 4610 | 4534 | 4628 | 4840 |
| பச்சிலைப்பள்ளி | 167.7 | 10148 | 8510 | 10014 | 7745 | 6010 | 4383 | 3277 | 3527 | 4621 | 4990 |
| கண்டாவளை | 209.7 | 27595 | 23003 | 15288 | 11143 | 8845 | 3681 | 2053 | 1723 | 2359 | 1988 |
| கரைச்சி | 411.0 | 73150 | 61137 | 46915 | 26060 | 14812 | 5418 | 1997 | 1323 | 783 | 624 |
| பூநகரி | 448.7 | 24154 | 20225 | 13994 | 8970 | 8046 | 6419 | 4566 | 4843 | 4785 | 4807 |
| மாந்தை மேற்கு | 608.0 | 17088 | 14630 | 18599 | 13743 | 9752 | 6708 | 4709 | 3658 | 4507 | 4193 |
| மடு | 533.0 | 8921 | 7631 | 6900 | 4520 | 2951 | 1911 | 1368 | 1275 | 864 | 1027 |
| மன்னார் | 212.0 | 59091 | 50937 | 48484 | 33270 | 27468 | 22307 | 18980 | 12202 | 14556 | 12142 |
| நானாட்டான் | 148.0 | 20698 | 17844 | 18319 | 14377 | 11519 | 7926 | 5012 | 4425 | 4249 | 3654 |
| முசலி | 475.0 | 9393 | 8009 | 13933 | 8317 | 525 | 4048 | 3769 | 3194 | 3124 | 2843 |
| செட்டிகுளம் | 399.1 | 33965 | 29770 | 21347 | 11382 | 7468 | 3318 | 1950 | 1448 | 1507 | 1905 |
| வவுனியா தெற்கு | 185.5 | 14908 | 13070 | 14069 | 11080 | 8448 | 4153 | 2942 | 2261 | 2104 | 1738 |
| வவுனியா | 6.7.7 | 133574 | 117153 | 48785 | 31563 | 22246 | 10126 | 6942 | 4103 | 4294 | 3896 |
| வவுனியா வடக்கு | 769.6 | 13158 | 11518 | 11703 | 6474 | 4184 | 2606 | 1797 | 1844 | 1952 | 1633 |
| துணுக்காய் | 326.3 | 10423 | 9732 | 7289 | 4929 | 2822 | 411 | 278 | 253 | 360 | 339 |
| மாந்தை கிழக்கு | 494.0 | 7648 | 6929 | 5613 | 3655 | 1909 | 469 | 278 | 428 | 375 | 437 |
| ஒட்டிசுட்டான் | 628.0 | 16895 | 15689 | 14003 | 7062 | 3929 | 3076 | 1133 | 1036 | 1211 | 1111 |
| கரைதுறைப்பற்று | 744.0 | 31186 | 28909 | 35826 | 22556 | 18285 | 11098 | 7711 | 6632 | 6382 | 5831 |
| புதுக்குடியிருப்பு | 371.0 | 25603 | 23770 | 14458 | 5413 | 3305 | 1906 | 1011 | 1011 | 1014 | 890 |
| வெலி ஓயா | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | - | - | - | - | - | - |

மூலம்: இலங்கைக் குடித்தொகைக்கணிப்புகள், மாவட்டப் புள்ளிவிபரக் கைந்நூல்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சம்பியன் கிண்ணத்தை தனதாக்கியது சண்டிலிப்பாய் பிரதேச செயலகம்




யாழ் மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான மாவட்ட மட்ட வலைப்பந்தாட்ட போட்டியில் சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது.

யாழ் மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான மாவட்ட மட்ட வலைப்பந்தாட்டப் போட்டி சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இறுதியாட்டத்தில் நடப்பாண்டு சம்பியனான சங்கானை பிரதேச செயலக அணியை எதிர்த்து சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணி மோதியது.

நான்கு கால் பகுதிகளாக நடைபெற்ற ஆட்டத்தில் ஒவ்வொரு கால் பகுதி ஆட்டத்திலும் சங்கானை பிரதேச செயலக அணி புள்ளிகளைப் பெற்ற போதிலும், இறுதிவரை சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணி போராடி தமது புள்ளிகளை உயர்த்தினர். இதனால் ஆட்டம் விறுவிறுப்பின் உச்சக் கட்டத்தை எட்டியது.

நான்கு கால் பகுதி ஆட்டங்களின் நிறைவில் இரு அணிகளும் 26:26 என்ற புள்ளிகளில் சமநிலை வகித்தனர். இதனால் வெற்றி தோல்வியைத் தீர்மானிக்க மேலதிக நேரம் வழங்கப்பட்டது. இரு அணிகளின் புள்ளிகளின் எண்ணிக்கையும் சம அளவில் அதிகரித்தது. இருப்பினும் ஆட்ட நேர முடிவில் சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணியினர் 36:35 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டனர். (6-8-90)

# வட மாகாண விவசாய போதனாசிரியர்கள் தொழிற்சங்கம்

## நாளை சுகயீன விடுமுறைப் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

நிரந்தரத் தீர்வுகள் வழங்கப்படாது கால நீடிப்புச் செய்வதை கண்டித்து நாளை புதன்கிழமை வட மாகாண விவசாய போதனாசிரியர்கள் தொழிற்சங்கத்தினர் ஒரு நாள் சுகயீன விடுமுறை போராட்டமொன்றை முன்னெடுக்கவுள்ளனர்.

நேற்று ஊடகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்ட ஊடக அறிக்கையிலே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

வட மாகாண விவசாய போதனாசிரியர்கள் தொழிற்சங்கத்தினால் கோரப்பட்ட தொழில்முறைமைக் கோரிக்கைகளிற்கான நிரந்தர தீர்வுகள் வழங்கப்படாமையினாலும் கால நீடிப்புச் செய்வதனாலும் மேலும், வட மாகாண விவசாய அமைச்சு மற்றும் திணைக்களத்தின் ஏதேச்சதிகாரமான நிர்வாக மற்றும் நிதி நடைமுறைகளினால் பாதிப்புறும் எமது தொழிற்சங்க உறுப்பினர்களினால் 2025.01.01 முதல் இன்றுவரை மேற்கொள்ளப்பட்டுவரும் சுற்றுநிருபத்திற்கமைய கடமையாற்றும் தொழிற்சங்க நடவடிக்கைக்கு மேலதிகமாக குறித்த போராட்டத்தினை முன்னெடுக்கவுள்ளோம்.

ஏனைய மாகாணங்களினை விடவும் வட மாகாண விவசாய போதனாசிரியர்கள் எதிர்கொள்ளும் நீண்டகால நிர்வாக மற்றும் நிதி தொடர்பான தொழில்முறைமைக் கோரிக்கைகளினை நிவர்த்தி செய்யாது வடமாகாண விவசாய திணைக்களம் மற்றும் திணைக்களத்தின் நிலையற்ற நிர்வாக மற்றும் நிதிக் கொள்கையினை கண்டித்தும் இவ் ஒரு நாள் சுகயீன விடுமுறைப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (6-8

# யாழ். பல்கலைக்கழகத்தின் உலக நடன தின விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சேர். பொன்னம்பலம் இராமநாதன் காண்பிய ஆற்றுகைக் கலைகள் பீடத்தின் "உலக நடன தினம்" இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ்ப்பாணம் திரு வள்ளுவர் பண்பாட்டு மையத் தில் இடம்பெறவுள்ளது.

யாழ். பல்கலைக்கழக நடனத் துறையின் தலைவர் செல்வி. மைதிலி அருளையா தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் ஸ்ரீ சற்குணராஜா, சிறப்பு விருந்தினராக யாழ்.பல்கலைக் கழக சேர். பொன்னம்பலம் இரா நாதன் காண்பிய ஆற்றுகைக் கலைகள் பீட பீடாதிபதி சா.சிவரூபன், கௌரவ விருந்தினராக யாழ்.இந்தியத் துணைத் தூதுவர் ஸ்ரீ சாய்முரளி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர் என ஏற் பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (3-8)

# சந்தைகளில் நேற்றைய விலை



| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 400 | 350 | 300 | 380 | 400 |
| உருளைக்கிழங்கு | 200 | 220 | 200 | 200 | 240 |
| பச்சைமிளகாய் | 180 | 200 | 200 | 220 | 300 |
| தக்காளி | 700 | 800 | 800 | 700 | 800 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 280 | 250 | 250 | 300 |
| கோவா | 400 | 350 | 300 | 300 | 400 |
| கரட் | 800 | 600 | 650 | 550 | 800 |
| பூசணி | 200 | 180 | 200 | 160 | 250 |
| புடோல் | 150 | 250 | 200 | 220 | 300 |
| வாழைக்காய் | 100 | 80 | 100 | 80 | 160 |
| சின்ன வெங்காயம் | 280 | 100-300 | 250 | 150-300 | 350 |
| பெரிய வெங்காயம் | 150 | 160 | 120 | 110 | 120 |
| பாகற்காய் | 600 | 500 | 500 | 400 | 600 |
| வெண்டக்காய் | 250 | 250 | 200 | 250 | 450 |
| கருணைக் கிழங்கு | 350 | 350 | 200 | 200 | 360 |
| பயற்றங்காய் | 400 | 200 | 250 | 280 | 300 |
| லீக்ஸ் | 250 | 250 | 200 | 200 | 250 |
| பீற்றூட் | 600 | 600 | 350 | 400 | 600 |
| கறிமிளகாய் | 800 | 500 | 500 | 450 | 800 |
| முருங்கைக்காய் | 1800 | 2000 | 1500 | 1300-1800 | 2000 |
| போஞ்சி | 600 | 650 | 500 | 500 | 800 |
| கத்தரிதம்புள்ள | 350 | 300 | 250 | -- | 350 |
| கீரை - 1 பிடி | 140 | 80-120 | 100 | 70 | 80 |
| தேசிக்காய் | 200 | 250 | 150 | 150 | 280 |
| தேங்காய் (ஒன்று) | 200 | 280 | 180 | 150-200 | 200-240 |
| இராசவள்ளி | 650 | 600 | 600 | 500 | 700 |
| வெங்காயப்பூ | 400 | -- | -- | -- | 300 |
| முள்ளங்கி | 150 | 150 | 150 | 120 | 300 |
| பொன்னாங்காணி | 120 | 70 | 80 | 100 | 60 |
| வல்லாரை | 80 | 70 | 80 | 80 | 80 |
| ஈரப்பலா | 150 | -- | 100 | 100 | -- |

# கடத்திச் செல்லப்பட்ட 12 முதிரை மரக்குற்றிகள் மீட்பு



(தருமபுரம்)

சட்டவிரோதமாகச் சிறிய ரக லொறி ஒன்றில் கடத்திச் செல்லப்பட்ட 12 முதிரை மரக்குற்றிகள் மீட்கப்பட்டதுடன் சாரதியும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஏ-35 பிரதான வீதியினூடாகப் புதுக் குடியிருப்பு பகுதியில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த சிறிய ரக லொறி ஒன்றில் மரக்கடத்தல் இடம் பெறுவதாக தருமபுரம் பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைவாக பொலிஸார் நேற்று முன்தினம் வீதி சோதனையை மேற்கொண்டவேளை குறித்த கைது நடவடிக்கை இடம்பெற்றிருந்தது.

இதன்போது பெறுமதி மிக்க 12 முதிரை மரக்குற்றிகள் மீட்கப்பட்டுள்ளதுடன் சாரதியும் கைது செய்யப்பட்டார்.

இந் நிலையில் கைதான நபரை விசாரணைகளின் பின்னர் கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தருமபுரம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம். சதுரங்க தெரிவித்துள்ளார். (6-8-316)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேர்தல் பிரசாரத்திற்காக எனது பெயரை அனுமதியின்றி பயன்படுத்தாதீர்கள்

### முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா



(கொழும்பு)

அனுமதியின்றித் தனது பெயரைத் தேர்தல் பிரசாரத்திற்காகப் பயன்படுத்துவதாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் தேர்தல் ஆணையாளர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்கவிடம் எழுத்து மூலம் முறைப்பாடு செய்துள்ளார்.

அத்தனகல்ல தேர்தல் தொகுதியில் கதிரை சின்னத்தில் போட்டியிடும் பொதுஜன ஐக்கிய முன்னணியின் வேட்பாளர்கள் தனது புகைப்படத்தைத் துண்டுப் பிரசுரங்களில் அனுமதியின்றி பயன்படுத்துவதாகத் தெரிவித்துள்ளார்.

லசந்த அலகியவன்ன மற்றும் சரண குணவர்தன ஆகியோரின் புகைப்படங்களுடன் தனது புகைப்படத்தையும் பிரசார நோக்கில் பயன்படுத்துவதாக முறையிட்டுள்ளார்.

தனது பெயரையோ புகைப்படங்களையோ எந்தவொரு காரணத்திற்காகவும் பயன்படுத்த வேண்டாம் என கதிரைச் சின்னத்தில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு அறிவித்துள்ளதாகத் தனது அதிகாரபூர்வக் கடிதத் தலைப்பில் சந்திரிக்கா தெரிவித்துள்ளார். (நி-8)

## ஊடகவியலாளர்கள் படுகொலைக்கு நீதிகோரி யாழில் போராட்டம்



(யாழ்ப்பாணம்)

படு கொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்கள் தராகி சிவராம் மற்றும் ரஜிவர்மன் ஆகியோரின் நினைவேந்தல் நிகழ்வும், குறித்த படுகொலைக்கு நீதி கோரிப் போராட்டமும் முன்னெடுக்கப்பட்டது. யாழில் அமைந்துள்ள படுகொலையான ஊடகவியலாளர்கள் நினைவுத் தூபி முன்பாக நினை வேந்தல் நிகழ்வு நடைபெற்றது. இந் நிகழ்வில் யாழ் மற்றும் தென்னிலங்கையைச் சேர்ந்த ஊடகவியலாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டு சுடரேற்றி, மலர் மாலை அணிவித்து மலர் தூபி அஞ்சலி செலுத்தினர்.

அதனைத் தொடர்ந்து படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதிகோரி போராட்டமும் முன்னெடுக்கப்பட்டது. (6-8-33)

## பொரலஸ்கமுவ தாக்குதல்; சாட்சியத்தைப் பதிவு செய்த முன்னாள் ஜனாதிபதி மைத்திரி

(கொழும்பு)

கடந்த 2008 ஆம் ஆண்டு பொரலஸ்கமுவ பகுதியில் நடந்த தற்கொலைக் குண்டுத்தாக்குதல் தொடர்பான வழக்கில் சாட்சியாகப் பெயரிடப்பட்ட முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கொழும்பு மேல் நீதிமன் றத்தில் நேற்று சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

2008 ஆம் ஆண்டு ஒக் டோபர் மாதம் 10 ஆம் திகதி பொரலஸ்கமுவ பகுதியில் அப் போதைய விவசாய அமைச்சராகச் செயற்பட்ட மைத்திரிபால சிறிசேனவைக் கொல்லும் நோக்கில் தற்கொலைக் குண்டுத் தாக்குதலுக்கு உதவியதாக இரண்டு பிரதிவாதிகளுக்கு எதிராக சட்டமா அதிபரால் தாக் கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று கொழும்பு மேல் நீதிமன்ற நீதி பதி ஆர்.எஸ்.எஸ். சப்புவித முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது, முன்னதாக பிறப்பிக்கப்பட்டிருந்த அழைப்பாணைக்கு அமைய முதல் சாட் சியாகப் பெயரிடப்பட்ட முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நீதிமன்றத்தில் முன்னிலையாகி தனது சாட்சியத்தைப் பதிவு செய்தமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

# INVITATION FOR BIDS (IFB)
# URBAN COUNCIL, CHAVAKACHCHERI
## Council Fund-2025/02

1. The **Chairman, Procurement Committee,** on behalf of Chavakachcheri Urban Council now invites sealed bids from eligible and qualified bidders for the works described in the table below. All the relevant details are described in the same table.

2. Bidding will be conducted through **National Competitive Bidding Procedure (NCB).**

3. Interested bidders may obtain further information from address given below in 6 and inspect the Procurement documents at the same place on any working days from 2025.04.29 until 2025.05.15 **from 09:00 hrs to 14:00 hrs.**

4. Qualification requirements are indicated in Section 4 of the Procurement document. Additional details are provided in Schedule (Section 5) for SBD 3 Documents.

5. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered with the Construction Industry Development Authority (CIDA) in the field of road construction/Building construction for grade mentioned in the table below.
**"Bidders shall also register themselves with the Registrar of Public Contracts Sri Lanka, in terms of the public Contract Act No 03. of 1987 for the contracts exceed Rs.5 million,"**

6. A complete set of Procurement Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the Secretary, Chavakachcheri Urban Council, Chavakachcheri (**T.P No: 021 227 0806, Fax No: 021 227 0079) during the period from 2025.04.29 until 2025.05.15 from 09:00 hrs to 14:00 hrs. upon payment of a nonrefundable fee as mentioned in the table.** The method of payment will be by cash

7. Bids (Original & Duplicate) shall be delivered or sent by registered post to the **Chairman, Procurement Committee, Chavakachcheri Urban Council, Chavakachcheri at or before 10.30 hrs, 2025.05.16** Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the bidders' representatives who choose to attend.

8. Pre-Bid Conference will be held at **Conference Hall, Chavakachcheri Urban Council, Chavakachcheri** commencing at 11.30 am on 2025.05.09

9. Bids shall be accompanied by a Bid security/ Refundable cash Deposit/ Bank Draft as per the information given in the Tables.

| | |
|---|---|
| Document Issuing/Purchasing Period | From 2025.04.29 until 2025.05.15 |
| Pre-Bid Conference | At 11.30 A.M on 2025.05.09 |
| Closing and Opening of Bids | At 10.30 A.M on 2025.05.16 |

| S No | Bid ID | Description of Work | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Contract Period (Days) | Grade Required | Non-Refundable Fees | Required Bid Security/Bank Draft/Security Deposit | | Bid Validity Period (Days) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | Security Amount | Validity Period | |
| 01 | NP/14/41(3)/ 2/CF/08/2025 | Reconstruction of Kalvayal Nunavil Road ,Phase – II (Balance) | 4.295 | 49 Days | C8& Above (Roads) | 2000.00 | 44,000.00 | 01-08-2025 | 49 Days |
| 02 | NP/14/41(3)/ 2/CF/09/2025 | Construction of Concreate Road Meesalai Allarai Urellai Road at Meesalai East; Reconstruction of Maruthadi Road at Manduvil | 8.779 | 84 Days | C7& Above (Roads) | 2000.00 | 90,000.00 | 29-08-2025 | 77 Days |
| 03 | NP/14/41(3)/ 2/CF/10/2025 | Construction of Kunchanthuravu road at Meesalai East | 5.014 | 56 Days | C7 & Above (Roads) | 2000.00 | 51,000.00 | 29-08-2025 | 77 Days |
| 04 | NP/14/41(3)/ 2/CF/11/2025 | Reconstruction of Kalvayal Srisunmuganantha road; Reconstruction of Kalvayal Ramalingam road 5th Lane ,Phase II; Construction of Katkuli 2nd Lane; Construction of Arachchiyalar road ( Balance) | 5.046 | 56 Days | C7 & Above ((Roads)) | 2000.00 | 52,000.00 | 29-08-2025 | 77 Days |
| 05 | NP/14/41(3)/ 2/CF/12/2025 | Renovation of Chavakachcheri Urban Council Conference Hall; Renovation of New Market Building Chavakchcheri Town | 4.113 | 56 Days | C8 & Above (Buildings) | 2000.00 | 42,000.00 | 01-08-2025 | 49 Days |
| 06 | NP/14/41(3)/ 2/CF/13/2025 | Renovation of kannadippiddy Hindu Cemetery | 4.265 | 84 Days | C8& Above (Buildings) | 2000.00 | 43,000.00 | 01-08-2025 | 49 Days |

**Chairman,**
**Procurement Committee**
**Urban Council, Chavakachcheri.** **2025.04.29**

(c-2839)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்.
நிழலின் அருமை வெயிலில் தெரியும்.
– பழமொழி

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## கட்டுமானத்துக்கான மண் தீர்க்க முடியாத பிரச்சினையா?

எங்கள் மக்கள் எதையும் அதிகூடிய விலை கொடுத்து வாங்கப் பழகிவிட்டனர். இதனால் ஏழை மக்களின் பாடு பெரும் திண்டாட்டமாகிவிட்டது.

ஆம், பொருட்களுக்கான கொள்வனவு விலைக்கும் விற்பனை விலைக்குமான வித்தியாசம் மிகவும் உயர்வாயிற்று.

அதாவது வர்த்தகர்கள் தாம் கொள்வனவு செய்கின்ற பொருட்களுக்கு அதிகூடிய இலாபத்தை வைத்து விற்பனை செய்கின்றனர்.

உண்மை. சில வர்த்தகர்களைத் தவிர, ஏனையவர்களின் நிலைப்பாடு இதுவாகவேயுள்ளது.

இதனால் மக்கள் அதிகூடிய விலை கொடுத்து குறித்த பொருட்களைக் கொள்வனவு செய்ய வேண்டியுள்ளது.

அதிலும் கட்டிடப் பொருட்களின் விலைகள் வர்த்தக நிலையங்களுக்கிடையிலேயே கடும் வித்தியாசத்தைக் காட்டி நிற்கிறது.

இந்நிலைமை காரணமாக சாதாரண மக்கள் ஒரு சிறிய வீட்டைக்கூட அமைக்க முடியாத பரிதாபத்துக்கு ஆளாகியுள்ளனர்.

இதுதான் நிலைமை என்றால், கட்டுமானத்துக்குத் தேவையான மண்ணின் விலை மிக உயர்வாகக் காணப்படுகிறது.

அதாவது, மண் விநியோகத்தில் இருக்கக்கூடிய நிபந்தனைகள் மற்றும் மண்ணுக்கான தட்டுப்பாடுகள் காரணமாக மண்ணின் விலை பல மடங்கு உயர்ந்துள்ளது.

இஃது ஒருபுறமிருக்க, மண்ணின் விலை அதிகரித்தமை காரணமாக கள்ள மண் ஏற்றுகின்ற காரியங்களும் நடந்தாகின்றன.

இவ்வாறான சூழ்நிலையில் கட்டுமானத்துக்கு உதவாத – தரமற்ற மண்; கட்டுமானப் பணிக்குப் பயன்படுத்தப்படுகின்ற கட்டாயம் ஏற்பட்டு விடுகிறது.

இதனால் எங்கள் தாயகத்தில் நிர்மாணிக்கப்படுகின்ற கட்டிடங்களின் தரம் – அவற்றின் ஆயுட்காலம் என்பன கேள்விக்குரியதாகி விட்டது.

ஆம், ஒரு காலத்தில் காங்கேசன்துறை சீமெந்திலும் நாகர்கோவில் மற்றும் மண்கும்பான் மண்ணிலும் கட்டப்பட்ட கட்டிடங்கள் இன்னமும் பல நூறாண்டுகளுக்குக் கம்பீரமாக நிற்கக் கூடியவையாக உள்ளன.

அதேநேரம் தற்போது தரமற்ற மண்ணின் பயன்பாடு காரணமாக புதுக் கட்டிடங்களில் வெடிப்புகளும் உடைவுகளும் ஏற்படலாயிற்று.

எனவே எங்கள் வட மாகாணத்தில் கட்டுமானத்துக்குத் தேவையாக உள்ள மண்ணுக்கு இருக்கக்கூடிய தட்டுப்பாட்டை ஏதோவொரு வகையில் தீர்த்து வைப்பதில் வட மாகாண அரச நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மண்ணுக்கான தேவை பற்றி பல தடவைகள் சுட்டிக் காட்டப்பட்டபோதிலும் அந்தப் பிரச்சினை கிடப்பில் போடப்பட்டுள்ளதேயன்றி, அதற்கு இதுவரை தீர்வு காணப்படவில்லை.

இதனால் தரமற்ற கட்டிடங்கள் அமையப் பெறுகின்ற மிக மோசமான நிலைமை நடந்து கொண்டிருக்கிறது.

ஆகவே இது விடயத்தில் சம்பந்தப்பட்டவர்கள் நிரந்தரத் தீர்வை எட்ட வேண்டும்.

## ஜனாதிபதிக்கு நிகரான உரிமைகள் இந்திய ஒப்பந்ததாரர்களுக்கும்

### இந்திய இரகசிய ஒப்பந்தத்தால் கிடைக்கும் என்கிறார் கம்மன்பில

(கொழும்பு)

இந்தியாவுடன் கைச்சாத்திடப்பட்டுள்ள மின்சக்தி மற்றும் எரிபொருள் தொடர்பான திட்டத்துக்காக இலங்கை வரும் இந்தியர்களுக்கு, ஜனாதிபதிக்கு நிகரான உரிமைகள் வழங்கப்படவுள்ளதாக உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பொன்றில் கலந்துகொண்டு இதனைக் குறிப்பிட்ட அவர், அதில் இந்தியா மற்றும் இலங்கைக்கு இடையிலான எண்ணெய்க் குழாய் இணைப்பு தொடர்பான ஒப்பந்தத்தின் 7 ஆவது சரத்தில், இந்த ஒப்பந்தம் தொடர்பான வேலைத்திட்டத்தில் பங்குபற்றும் இந்தியர்களுக்கும் அதில் இந்திய அரசாங்கத்துக்காகப் பணியாற்றும் இலங்கையர்களுக்கும் எதிராக வழக்குத் தொடரமுடியாது என்ற விடுபாட்டுரிமை வழங்கப்படும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளதாக உதய கம்மன்பில சுட்டிக்காட்டியுள்ளார்.

அதற்கமைய, இந்த வேலைத்திட்டங்களால் ஏற்படும் சூழல் பாதிப்புக்கள் அல்லது வேறு சில விடயங்கள் தொடர்பிலும் அதில் குறிப்பிடப்பட்டுள்ள தரப்பினருக்கு எதிராக வழக்குத் தொடர முடியாது.

இலங்கையின் சட்டத்துக்கமைய, நாட்டின் முதல் குடிமகனான ஜனாதிபதி மாத்திரமே இத்தகைய விடுபாட்டுரிமைக்கு உரித்துடையவராவார்.

எனவே,. அரசியலமைப்பின் 12 (1) சரத்தின் கீழ், குறிப்பிடப்பட்டுள்ள சட்டத்தின் முன், அனைவரும் சமம் என்ற கருத்து இந்த ஒப்பந்தங்களில் வெளிப்படையாக மீறப்பட்டுள்ளது என்றார். (ம-4,7)

## யாழில் மின்னல் அனர்த்தம் காரணமாக 19 பேர் பாதிப்பு

யாழில் ஏற்பட்ட மின்னல் அனர்த்தம் காரணமாக இதுவரை 6 குடும்பங்களைச் சேர்ந்த 19 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 4 வீடுகளும் பகுதியளவில் சேதமடைந்துள்ளதாக யாழ். அனர்த்த முகாமைத்துவ பிரிவின் பிரதிப் பணிப்பாளர் ரி.என்.சூரியராஜா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

உடுவில் பிரதே செயலர் பிரிவிற்குட்பட்ட ஜே/208 கிராம சேவகர் பிரிவில் இரு குடும்பத்தைச் சேர்ந்த ஏழு பேரும் கோப்பாய் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட ஜே/279 கிராம சேவகர் பிரிவில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த 5பேரும் சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட ஜே/301 கிராம சேவகர் பிரிவில் 2 குடும்பங்களை சேர்ந்த 3 பேரும் மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட ஜே/426 கிராம சேவகர் பிரிவில் ஒரு குடும்பத்தை சேர்ந்த 4 பேரும் இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (ம-4,7)

## மர்ம மடிக்கணனியால் வெடிகுண்டு அச்சம்

### ரஷ்ய தூதரகத்தில் பதற்றம்

(கொழும்பு)

வெடிகுண்டு அச்சுறுத்தல் காரணமாகக் கொழும்பில் உள்ள ரஷ்ய தூதரகம் நேற்று பாதுகாப்புப் படையினரின் அவசர சோதனைக் குட்படுத்தப்பட்டது.

ரஷ்ய தூதரகத்திற்கு வெளிநாட்டவர் ஒருவர் வழங்கிய சந்தேகத்திற்கிடமான மடிக்கணினி ஒன்றினாலேயே அங்கு குறித்த வெடிகுண்டு அச்சம் ஏற்பட்டது.

பையொன்றில் இருந்த அந்தக் கணனி, வெடி குண்டாக இருக்கலாமென தூதரக அதிகாரிகள் கருதிய நிலையில் கருவாத்தோட்ட பொலிஸாருக்கு தகவல் கொடுக்கப்பட்டது.

பொலிஸார் சம்பவ இடத்திற்கு விரைந்து சோதனைகளை நடத்தியபோது அது வெளிநாட்டுப் பிரஜை ஒருவரினால் தவறவிடப்பட்டதென தெரியவந்தது. சம்பந்தப்பட்ட பிரஜை அதனைப் பொறுப்பேற்றதையடுத்து பதற்ற நிலை சீரானது. (ம-4,7)

## இளைஞன் கொலை வழக்கில் ஐவருக்கு மரண தண்டனை

2012 ஆம் ஆண்டு முகத்துவாரம் பகுதியில் இளைஞன் ஒருவர் தாக்கப்பட்டு கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பிலான வழக்கில் ஐவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளதுடன்,

மேலும் இருவருக்கு ஆயுள் தண்டனை விதித்து கொழும்பு மேல் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

2012 ஆம் ஆண்டு செப்டம்பர் 6 ஆம் திகதி முகத்துவாரப் பகுதியில் இரு குழுக்களிடையே ஏற்பட்ட தகராறில், 21 வயதுடைய இளைஞர் ஒருவர் தடிகளால் தாக்கப்பட்டு கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் குறித்த நபர்கள் மீது வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

நீண்ட நாட்கள் விசாரணைக்குப் பிறகு சந்தேகநபர்கள் மீதான குற்றம் அரச தரப்பினரால் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து குற்றவாளிகள் ஐவருக்கு மரண தண்டனையும் இருவருக்கு ஆயுள் தண்டனையும் விதித்து நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. (ம-7)

## வெளிநாட்டு சிகரெட்டுகளுடன் இளம் தொழிலதிபர் கைது

சட்டவிரோதமாக நாட்டிற்குக் கொண்டு வரப்பட்ட வெளிநாட்டு சிகரெட்டுகளுடன் நபரொருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த கைது நடவடிக்கையானது நேற்று (28) விமான நிலைய சுங்க அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சம்பவத்தில் இரத்தினபுரி பகுதியைச் சேர்ந்த 33 வயதுடைய தொழிலதிபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபர் நேற்று காலை 8.35 மணிக்கு துபாயிலிருந்து கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு எமிரேட்ஸ் விமானம் மூலம் வந்தடைந்த நிலையில் விமான நிலைய சுங்க அதிகாரிகள் மேற்கொண்ட சோதனையில் அவரது 08 பயணப் பொதிகளில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 83,600 வெளிநாட்டுத் தயாரிப்பு சிகரெட்டுகள் அடங்கிய 418 சிகரெட் அட்டைப்பெட்டிகளைச் சுங்க அதிகாரிகள் பறிமுதல் செய்துள்ளனர்.

இந்தநிலையில், மீட்கப்பட்ட சிகரெட்டுகளின் பெறுமதி 12 இலட்சத்து 54 ஆயிரம் ரூபா எனத் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை விமான நிலைய சுங்க அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

## மின்னல் தாக்கி பெண்ணொருவர் பலி

### அறுவர் படுகாயம்

(அட்டாம்பிட்டிய)

அட்டாம்பிட்டிய - நெலுவ கிம்ப்ரோஸ் பகுதியில் மின்னல் தாக்கியதில் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

அத்துடன் 5 பெண்களும் ஆண் ஒருவரும் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த பகுதியில் உள்ள தேயிலை மடுவமொன்றில் வைத்து அவர்கள் இந்த அனர்த்தத்திற்கு முகங்கொடுத்துள்ளதாகவும் சம்பவத்தில் பலியான பெண் குறித்த பகுதியைச் சேர்ந்த 48 வயதுடையவர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை கடும் மழையுடனான வேளையில் ஏற்படும் மின்னல் தாக்கங்களிலிருந்து பொதுமக்கள் தம்மை தற்காத்துக்கொள்ளுமாறு வானிலை ஆய்வு மையம் எச்சரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-4,7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராகு–கேது பெயர்ச்சி பலன்கள்

## 26.04.2025–12.11.2026 வரை



இதுவரை உங்கள் இராசிக்கு 11 ஆம் இடமான லாப ஸ்தானத்தில் சஞ்சரித்து வந்த ராகு பகவான் 26.4.2025 அன்று உங்கள் இராசிக்கு 10 ஆம் இடத்திற்கு பெயர்ச்சியாகிறார். அது தொழில் ஸ்தானம் என்பதால், தொழில் வளம் சிறப்பாக இருக்கும். அதேநேரம் கேது பகவான் உங்கள் இராசிக்கு 4 ஆம் இடத்தில் சஞ்சரிக்கப்போகின்றார். எனவே ஆரோக்கியத்தில் கவனம்

தால் கல்வி சம்பந்தமாக எடுத்த முயற்சி கைகூடும். பட்ட மேற்படிப்பு படிக்க வாய்ப்புக்கள் உருவாகும். இடமாற்றம், வீடு மாற்றம் ஏற்படலாம்.

**குருசாரத்தில் ராகு சஞ்சாரம் (26.4.2025 முதல் 31.10.2025வரை)**

பூரட்டாதி நட்சத்திரக் காலில் குருவின் சாரத்தில் ராகு பகவான் சஞ்சரிக்கும் பொழுது, மன நிம்மதி குறையும், நினைத்தது ஒன்றும், நடந்தது ஒன்றுமாக இருக்கும். உங்கள் ராசிநாதன் சுக்கிரனுக்கு, குரு பகைக் கிரகம் என்பதால், அவரது நட்சத்திர சாரத்தில் உலாவரும் போது எதிலும் கூடுதல் கவனத்துடன் செயற்படுங்கள். சுய ஜாதகத்தில் குரு-சுக்கிர பார்வை இருப்பவர்களுக்கு இக்காலம் இனிய காலமாக அமையலாம்.

என்றாலும் விரயங்கள் அதிகரிக்கும். எதையும் திட்டமிட்டுச் செய்ய இயலாது. திடீர் திடீரென

விளங்குபவர்.

எனவே சொத்துக் கள் வாங்கும், விற்கும் யோகம் உண்டு. கொடுக்கல்- வாங்கலில் இருந்த மந்த நிலைமாறும். குடும்பத் தொழிலை சொந்தக் கட்டத்திற்கு மாற்றும் முயற்சி கைகூடும்.

**சூரிய சாரத்தில் கேது சஞ்சாரம் (26.4.2025 முதல் 27.6.2025 வரை)**

உத்தரம் நட்சத்திரக் காலில் சூரிய சாரத்தில் கேது சஞ்சரிக்கும் போது, உடல் நலனில் மிகுந்த கவனம் தேவை. உள்ளத்தில் நினைத்ததை உடனடியாகச் செய்ய இயலாது.




12.11 2026 வரை)

மகம் நட்சத்திரக் காலில் சுய சாரத்தில் கேது சஞ்சரிக்கும் பொழுது, தேக ஆரோக்கியத்தில் சீர்கேடுகள் அதிகரிக்கும். மனப் பயம் உண்டு. அலைச்சலைக் குறைத்துக் கொள்வது நல்லது. ஆற்றல் மிக்கவர்கள் அருகில் இருந்தாலும் சில காரியங்கள் முடிவடையாமல் தாமதப்படுத்தப்படும்.

தெய்வ வழிபாடு தக்க சமயத்தில் கைகொடுக்கும். கடன் வாங்கும் சூழ்நிலை வரலாம். போட்டிகளுக்கு மத்தி யில் வாழ்க்கை அமையும் நேரம் இது. உத்தியோகத்தில் மேலதிகாரிகளின் அனுசரிப்புக் குறையும்

**சனிப்பெயர்ச்சிக் காலம்**

6.3.2026 அன்று சனி பகவான், மீன இராசிக்குப் பெயர்ச்சி ஆகிச் செல்கிறார். அப்போது இலாப ஸ்தானம் பலப்படுகிறது.

## ராகு வரும் இடம் பத்தாகும் வந்த தொகையோ சொத்தாகும்!

தேவை. வீடு வாங்கும் யோகம் அல்லது கட்டும் யோகம் உண்டு.

ஜாதகத்தில் 10 ஆம் இடம், தொழில் முன்னேற்றத்தைக் குறிப்பதாகும். அந்த இடத்தில் ராகு பகவான் வரும்பொழுது செய்யும் செயல்கள் வெற்றி பெறும். திடீர் முன்னேற்றம் ஏற்படும். வேகமும், விவேகமும் கலந்து செயற்பட்டு வெற்றி காண்பீர்கள். சுய தொழில் செய்பவர்களுக்கு புதிய ஒப்பந்தங்கள் அடுக்கடுக்காக வந்து அலை மோதும். தொழிலை விரிவுபடுத்தும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு திறமைக்குரிய அங்கீகாரம் கிடைக்கும். உயர் அதிகாரிகள் உங்களுக்கான சலுகையை வழங்க முன் வருவர். பெற்றோரின் உடல் நலத்தில் கவனம் தேவை.

சுகஸ்தானத்தில் சஞ்சரிக்கும் கேதுவால் ஆரோக்கியத் தொல்லை அதிகரிக்கலாம். அதிகபிரயாசை எடுத்தும் சில காரியங்கள் முடிவடையாமல் போகலாம். வீடு வாங்குவது, இடம் வாங்குவது, கட்டிய வீட்டைப் பராமரிப்பது போன்ற வற்றில் கவனம் செலுத்தும் நேரம் இது. கேது ஞானகாரகன் என்று அழைக்கப்படுவ

மாற்றங்கள் ஏற்படும்.

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**

**சுய சாரத்தில் ராகு சஞ் சாரம் (1.11.2025 முதல்9.7.2026 வரை)**

சதய நட்சத்திரக் காலில் தனது சுய சாரத்தில் ராகு பகவான் சஞ்சரிக்கும் நேரத்தில் தொழில் தொடர்புக்கு நண்பர்கள் உதவி செய்வர். துணிவும், தன்னம்பிக்கையும் கூடும். எதிர்காலத்தைப் பற்றிய பயம் அகலும். புதிய கூட்டாளிகள் பொருளாதாரத்தைப் பெருக்க முன்வருவர். அரசு வழியில் எதிர்பார்த்த சலுகை கிடைக்கும். மாற்றுக் கருத்துடையோர் மனம் மாறுவர். உத்தியோகத்தில் நீங்கள் எதிர்பார்த்துக் காத்திருந்த வேலை அமையும். சுய தொழில் தொடங்கும் முயற்சி கைகூடும்.

**செவ்வாய் சாரத்தில் ராகு சஞ்சாரம் (10.07. 2026 முதல் 12.11.2026 வரை**

அவிட்ட நட்சத்திரக்காலில் செவ்வாய் சாரத்தில் ராகு பகவான் சஞ்சரிக்கும் பொழுது, உங்கள் இராசிக்கு நன்மையும், தீமையும் கலந்தே நடைபெறும். உங்கள் இராசியைப் பொறுத்த வரை செவ்வாய் விரயாதிபதியாகவும் சப்தமாதிபதியாகவும்

கடன் சுமை கூடிக் கொண்டே செல்லும். கல்வி சம்பந்தப்பட்ட முயற்சியில் தடைகள் உண்டாகும். குடும்பப் பிரச்சினை மீண்டும் தலை தூக்கும். கொள்கைப்பிடிப்போடு செயற்பட இயலாது. கடுமையாக முயற்சித்தும் ஒரு சில காரியங்கள் கைகூடாமல் போகலாம். கொடுக்கல்-வாங்கலில் கவனம் தேவை

**சுக்ர சாரத்தில் கேது சஞ்சாரம் (28.6.2025 முதல் 5.3.2026 வரை)**

பூரம் நட்சத்திரக் காலில் சுக்கிர சாரத்தில் கேது சஞ்சரிக்கும் பொழுது வசதி வாய்ப்புக்கள் பெருகும். வாகன யோகம் உண்டு. தொழில் பங்குதாரரை விலத்தி விட்டு தனித்து இயங்கலாமா? என்று யோசிப்பீர்கள்.

குடும்பத்தில் உள்ளவர்களின் குறைகளைத் தீர்க்க அதிகம் செலவிடுவீர்கள். வியாபாரத்தில் போட்டிகள் ஏற்பட்டாலும் தொழில் சூடுபிடிக்கும். மனச் சஞ்சலம் உண்டாகும். அரை குறையாக நின்ற கட்டடப்பணியைத் தொடர்வீர்கள். அதிகார வர்க்கத்தில் உள்ளவர்களுக்கு திடீரெனப் பொறுப்புகள் மாற்றப்படும்.

**சுய சாரத்தில் கேது சஞ்சாரம் (6.3.2026 முதல்**

எனவே உச்சத்தை எட்டும் மனத் தெளிவோடு பணிபுரிவீர்கள்.

புதியபாதை புலப்படும். வியாபாரத்தில் அதிரடிச் சலுகைகளை வழங்கி இலாபத்தைக் குவிப்பீர்கள். உத்தியோகத்தில் சக பணியாளர்களுக்குக் கிடைத்த வெளிநாட்டு வாய்ப்பு இப்பொழுது உங்களுக்கும் கிடைக்கும்.

**குருப்பெயர்ச்சிக் காலம்**

ராகு-கேது பெயர்ச்சிக் காலத்தில் குரு பெயர்ச்சி நிகழ்கிறது. மே 11 ஆம் திகதி மிதுன இராசிக்கு குரு செல்கிறார். அப்போது நல்ல வாய்ப்புக்கள் இல்லம் தேடி வரலாம். நாடு மாற்றம், வீடு மாற்றம் உண்டு. ஆரோக்கியத் தொல்லை அகலும் உள்ளத்தில் நினைத்ததை உடனடியாகச் செய்து முடிப்பீர்கள்.

பொருளாதாரம் அதற்கு இடம் கொடுக்கும். குடும்ப ஒற்றுமை பலப்படும். ஒக்டோபர் 8 ஆம் திகதி குருபகவான், கடக இராசிக்கு அதிசாரமாக பெயர்ச்சி ஆகிச் செல்கிறார். அப்போது அதன் பார்வைப் பலத்தால் நல்ல காரியங்கள் பலவும் நடைபெறும். நண்பர் கள் நம்பிக் கைக்குரிய விதம் நடந்து கொள்வர். புதிய திட்டங்கள் வெற்றி பெறும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பக்கச்சார்பாக...

நயினாதீவு இறங்குதுறையில் இரு நாட்களுக்கு முன்னர் மணல் ஏற்றி இறக்கும் தொழிலாளிகளுக்கும் தொழில் வழங்குநருக்கும் இடையே ஏற்பட்ட முரண்பாடு கைகலப்பாக மாறி இருந்தது.

இதனைத் தொடர்ந்து இருதரப்பினருக்கும் இடையில் தொடர்ந்தும் முறுகல் நிலை ஏற்பட்டிருந்த நிலையில் தொழிலாளி ஒருவர் காணாமல் போயிருந்தார்.

இந்த நிலையில் தொழிலாளிகளின் உறவினர்கள் அவருடன் முரண்பாட்டில் ஈடுபட்டு இருந்தவர்களில் இருவரை தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர்.

பொலிஸ் நிலையத்தில் இருதரப்பினராலும் வழங்கப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் காணாமல்போன மற்றும் ஒரு தரப்பினரின் கட்டுப்பாட்டில் இருந்த இருவரும் சம்பந்தப்பட்டவர்களால் விடுவிக்கப்பட்டிருந்தனர்.

தற்பொழுது தொழிலாளிகள் தரப்பைச் சேர்ந்த எட்டுப் பேரை ஊர்காவற்றுறைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பொலிஸார் பக்கச்சார்பாக நடப்பதாகவும் இதற்கு நீதி கோரியும் ஊர்காவற்றுறை இறங்குதுறையில் இக்கவனயீர்ப்புப் போராட்டம் இடம்பெற்றது. (ம-4,7)

## தபால்...

களிக்க வேண்டும்.

தபால்மூல வாக்களிப்புக்கு இனி கால அவகாசம் வழங்கப்படமாட்டாது எனத் தேர்தல்கள் ஆணைக்குழு தபால்மூல வாக்களிப்புக்கு தகுதி பெற்றுள்ள அரச உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தியுள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் எதிர்வரும் மே மாதம் 6ஆம் திகதி நடைபெறவுள்ள நிலையில் தேர்தல் கடமைகளில் ஈடுபடும் அரச உத்தியோகத்தர்களுக்கான தபால்மூல வாக்களிப்புக்கு நான்கு நாட்கள் ஒதுக்கப்பட்டன.

இதற்கமைய கடந்த வியாழக்கிழமை (24), வெள்ளிக்கிழமை (25) ஆகிய தினங்களில் முதற்கட்டமாக நடைபெற்றது. அதேபோல் நேற்று (28) மூன்றாவது நாளாக வாக்கெடுப்பு நடைபெற்றது. இறுதியாக இன்றைய தினம் செவ்வாய்க்கிழமை இறுதியாக வாக்கெடுப்பு நடைபெறவுள்ளது.

தபால்மூல வாக்களிப்புக்கு ஒதுக்கப்பட்ட நான்கு நாட்கள் இன்றுடன் நிறைவடைகின்ற நிலையில் தபால்மூல வாக்களிப்புக்குத் தகுதிபெற்ற அரச உத்தியோகத்தர்கள் தவறாமல் இன்றைய தினம் வாக்களிக்க வேண்டும் என்றும் வாக்களிப்புக்கான கால அவகாசம் இனி வழங்கப்படமாட்டாது என்றும் தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது. (ம-4,7)

## தேர்தல் சட்டத்தை...

தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாணத்தில் உள்ள ஒரு கோயில் வளாகத்தில் பிரதமர் ஹரிணி அமரசூரியவின் தேர்தல் பேரணி நடைபெற்றதாகப் புகார் அளிக்கப்பட்ட போது, தேர்தல்கள் ஆணைக்குழு அதிகாரிகள் அந்த இடத்திற்குச் சென்றனர். ஆனால் பிரதமரின் பாதுகாப்புப் பணியாளர்கள் தேர்தல்கள் ஆணைக்குழு அதிகாரிகளை உள்ளே நுழைய அனுமதிக்கவில்லை, அவர்கள் திரும்பிச் சென்றனர்.

நாட்டில் தேர்தல் நடவடிக்கைகளை நிர்வகிக்கவும் மேற்பார்வையிடவும் தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு முதுகெலும்பு இருந்தால், அது சம்பந்தப்பட்ட அதிகாரங்களைக் கொண்டிருப்பதால், அது உடனடியாக இந்த விடயத்தில் நடவடிக்கை எடுக்கும் என்று சுமந்திரன் சவால் விடுத்தார்.

சட்டங்களின்படி, தேர்தல் அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, பொலிஸ் சேவை தேர்தல் ஆணையத்தின் கீழ் வருகிறது. சட்டம் மற்றும் அரசியலமைப்புச் சட்டம் இதைக் கூறுகிறது. தேர்தல் ஆணைக்குழு ஒரு சுயாதீன ஆணையமாக இருந்தாலும், இந்த அதிகாரங்களில் எதையும் பயன்படுத்துவதில்லை.

எனவே, [illegible] டிக்கைகள் [illegible] கின்றன.

இந்தப் பிரச்சினைகளை விசாரிக்கவோ அல்லது தீர்க்கவோ தேர்தல் ஆணையத்திற்கு முதுகெலும்பு இல்லை என்று கூறிய சுமந்திரன், நல்லாட்சி மற்றும் சட்டத்தின் ஆட்சியை நிலைநிறுத்துவதாகக் கூறிக்கொண்ட அரசாங்கம், ஆட்சிக்கு வந்த ஆறு மாதங்களுக்குள் இவற்றை வெளிப்படையாக மீறுவதாகக் காணப்படுகிறது என்றார். (ம-7,4)

## இந்து மாணவன்...

வெளியாகியுள்ள க.பொ.த உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் கணிதப் பிரிவில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மாணவன் மலர்வண்ணன் அகரன் மாவட்ட ரீதியில் 2ஆம் இடத்தையும் தேசிய ரீதியில் 4ஆம் இடத்தையும் பெற்றுள்ளார். (ம-7,4)

## மன்னார்...

உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் கடந்த 26 ஆம் திகதி வெளியாகின.

அதில் கலைப்பிரிவில் மன்னார் கல்வி வலயத்தைச் சேர்ந்த மன்னார் சித்திவிநாயகர் இந்து தேசிய பாடசாலை மாணவி ஜெயந்தன் பவதாரணி 3ஏ சித்திகளைப் பெற்று மாவட்ட மட்டத்தில் முதலாம் இடத்தையும் தேசிய ரீதியில் 84 வது இடத்தையும் பெற்றுள்ளார். (ம-7,4,285)

## கிளி...

வருவதாகவும்,

ஒரு கிலோ உப்பு 300 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுவதாகவும் நுகர்வோர் பெரும் கவலையைத் தெரிவித்துள்ளனர்.

கடந்த மாதம் 28ஆம் திகதி முதல் ஆனையிறவு உப்பு அனைவரது கைகளிலும் என கூறப்பட்டிருந்த போதிலும் இதுவரையில் ஒரு கிலோ உப்பைக் கூட பெற முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும்

இந் நிலை தொடருமாயின் தேங்காய்க்கு ஏற்பட்ட தட்டுப்பாடு போன்று உப்புக்கும் ஏற்படும் என நுகர்வோர் தெரிவித்துள்ளனர். (ம-7,4)

## எரி...

குத்தானே எரியூட்டியுள்ளார். எரிகாயங்களுக்குள்ளானவரை உறவினர்கள் மீட்டு யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதித்த நிலையில் நேற்று (28) அதிகாலை 2 மணிக்கு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

மரண விசாரணைகளை யாழ். திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (ம-7,4)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127






































Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் வீராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

அட்சய திதியை முன்னிட்டு

# அக்ஷா நகைமாடம்



புதிய கடை திறப்பு விழா

நாளை 30.04.2025 காலை 6.30 மணியளவில் இல.80/1 மாநகர சபைக் கட்டிடம், கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணத்தில் புதுப்பொலிவுடன் அக்ஷா நகைமாடம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் அட்சய திதியை முன்னிட்டு 22 நிறைக்கு உட்பட்ட அனைத்து நகைகளும் உற்பத்தி விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

அன்றைய தினம் கொள்வனவு செய்யும் வாடிக்கையாளர்களுக்கு அன்பளிப்புகள் வழங்கப்படும்.

இவ் அழைப்பினைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொண்டு வாடிக்கையாளர்கள், அன்பர்கள் அனைவரும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இல.80/1, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (4053)

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (1075)

076 825 7716 (ஆகாஸ்)

## பெண் உதவியாளர் தேவை

பருத்தித்துறைப் பகுதியில் வயோதிபப் பெண்ணொருவரை வீட்டில் தங்கியிருந்து பராமரிக்க நேர்மையான, வேலைகளைத் திறம்படச் செய்யக்கூடிய பெண் உதவியாளர் தேவை. நீண்ட நாட்களுக்கு நின்று வேலை செய்யக்கூடியவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும்.

தொடர்புகளுக்கு :
074 154 7811 (1076)

## மணமகள் தேவை

1990 இல் பிறந்த அத்த நட்சத்திரம், கிரக பாவம் 21, ஆசிரியராகப் பணிபுரியும் பட்டதாரி (BSc, PGDE, M.Ed) மணமகனுக்கு BSc அல்லது அதற்கு மேல் உத்தியோகம் உடைய மணமகள் தேவை.

தொடர்புகளுக்கு :
021 222 9013, 077 229 2464 (4054)

## இளைஞனை காப்பாற்றிய பொலிஸார்

போர்ட்சிட்டி கடற்கரையிலிருந்து அலையில் அடித்துச் செல்லப்பட்ட 18 வயது இளைஞன் ஒருவர் பொலிஸ் உயிர் காக்கும் பிரிவின் அதிகாரிகளால் மீட்கப்பட்டுள்ளார்.

கடந்த 26 ஆம் திகதி போர்ட் சிட்டி கடற்கரையில் நீந்திக் கொண்டிருந்த போது அந்த இளைஞன் இந்த அனர்த்தத்தை சந்தித்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதன் போது உயிர் காக்கும் பணியில் இருந்த அதிகாரிகள் உடனடியாக நடவடிக்கை எடுத்து, அந்த இளைஞனை மீட்டு அடிப்படை முதலுதவி அளித்து காப்பாற்றினர். (ம-4.7)

## குழந்தை பராமரிப்பாளர் தேவை

வயது : 2
இடம் : வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம்.
நேரம் : காலை 8 மணி முதல் மாலை 5 மணி வரை

077 696 2565 (1072)

## உடனடி வேலை வாய்ப்பு
நிர்வாக உத்தியோகத்தர்



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்

V2 TRAVELS

எமது கிளைகள்
• கிளிநொச்சி • சுன்னாகம்
• சாவகச்சேரி • மானிப்பாய்
• நெல்லியடி • பருத்தித்துறை
• திருகோணமலை • வல்வெட்டித்துறை
• கோப்பாய் • புத்தூர்
• பண்டத்தரிப்பு • சங்கானை
• கொழும்பு

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com (C-2843)

# TECHNO WORLD
A/L தொழில்நுட்பப் பிரிவு

10 வது ஆண்டில் தடம் பதிக்கின்றது

இம்முறையும் மாவட்ட தேசிய ரீதியில் முன்னிலையில்

### பொறியியல் தொழில்நுட்பவியல்

| NAME | RESULTS | RANK | NAME | RESULTS | RANK | NAME | RESULTS | RANK |
|---|---|---|---|---|---|---|---|---|
| Piraveen | 2AB | 1(Jaffna) | Banushan | 3B | 9 | Yakeeshan | B2C | 26 |
| Annon | 2AB | 1(Mannar) | Sathiya | B2C | 9 | Venujan | A2C | 27 |
| Abiram | ABC | 1(Kilinochi) | Mathumini | 3C | 9 | Yuveskar | B2C | 31 |
| Kokulan | 2AC | 2(Vavuniya) | Pirajalan | 3C | 10 | Sakithiyan | 3C | 34 |
| Pranavan | 2AB | 3(Jaffna) | Majurathan | 3B | 11 | Anfas | 3C | 39 |
| Jinusikan | 3C | 3(Mullaithevu) | Vithushan | ABC | 15 | Papylon | B2C | 40 |
| Kiruthika | B2C | 5 | Dilaxsan | 3B | 18 | Thanosikan | B2C | 41 |
| Jenarthan | 3B | 6 | Sathursan | C2S | 19 | Thanushan | B2C | 49 |
| Saroban | BCS | 7 | Narmathan | C2S | 20 | Mathurshan | B2C | 53 |
| Thanocika | C2S | 8 | Banushan | 2BC | 22 | Kirusikan | ACS | 56 |
| Ahamed | C2S | 8 | Mathankine | 2BC | 25 | Abinash | 2CS | 59 |

### உயிர்முறைமைகள் தொழில்நுட்பவியல்

| NAME | RESULTS | RANK | NAME | RESULTS | RANK |
|---|---|---|---|---|---|
| Barvajan | B2C | 2(Kilinochchi) | ThinesKumar | 2BC | 10 |
| Tharaniya | 3C | 3(Kilinochchi) | Pavithra | 2BC | 14 |
| Sankavi | B2C | 4 | Luxsajini | B2C | 22 |
| Kajatheepan | 2BC | 5 | Sampavi | BCS | 24 |
| Pathiyavan | BCS | 6 | Jenifa | BCS | 28 |
| Tharshana | 2BC | 6 | Mathusa | 3C | 31 |
| Puthiyaval | C2S | 6 | Kajaluxshi | 2CS | 35 |
| Kajani | 2BC | 7 | Kisalan | BCS | 38 |
| Jathusan | A2B | 8 | Asika | 2CS | 45 |
| Kamsika | 2CS | 8 | Thanusikan | B2S | 55 |
| Lithusana | ABC | 9 | Abinaya | C2S | 58 |
| Jalini | 2CS | 10 | | | |

(C-2840)

வெலிங்டன் சந்தி,
பெருமாள் கோவில் வீதி, யாழ்ப்பாணம். 077 017 5346

A/L தொழினுட்பப்பிரிவு

# Techna
Technical Institute
Smart Thinking Leads To Innovate

A/L 2024 உயர்தரப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளை பெற்ற மாணவர்களை
பாராட்டி வாழ்த்துகின்றோம்

### பொறியியல் தொழினுட்பவியல்

| பெயர் | பெறுபேறு | மாவட்ட நிலை | பெயர் | பெறுபேறு | மாவட்ட நிலை |
|---|---|---|---|---|---|
| J.சியாமளன் | A 2B | 04 | B.வேனுசன் | A 2C | 27 |
| S.சந்தோஸ் | 3A | 02 | S.சுபானுயா | B 2C | 29 |
| S.சுவேதன் | 2B C | 02 | C.சதுஜன் | B 2C | 30 |
| P.கோபிதரன் | 3C | 06 | K.கவிநயா | 3C | 33 |
| B.நேருஜன் | A B C | 07 | T.சிந்துஜன் | B 2C | 34 |
| V.ஆருத்திரன் | 2B C | 08 | J.கலைச்சாந்த் | B C S | 35 |
| B.சுடரோன் | 3B | 10 | L.ஜெனுசாந்த் | 3C | 36 |
| J.சுபர்ஷா | 3B | 12 | K.யதுசன் | 3C | 37 |
| A.டிலக்சன் அருள்ராஜ் | A B C | 14 | V.ஜெயசூர்யா | 3C | 39 |
| K.ஆரூரன் | 3B | 16 | U.அருண்ஜா | B 2C | 52 |
| V.லவகுமார் | 2B C | 17 | L.நிதுசன் | B 2C | 55 |
| S.கஜானன் | B 2C | 19 | K.புகழன் | C 2S | 58 |
| V.சுவேந்தன் | 2B C | 21 | S.H.றுஸ்கி அஹமட் | C 2S | 08 |
| J.ஜெயவினு | 2B C | 23 | M.H.M.ஹசன் | A 2S | 10 |

### உயிர் முறைமைகள் தொழினுட்பவியல்

| பெயர் | பெறுபேறு | மாவட்ட நிலை | பெயர் | பெறுபேறு | மாவட்ட நிலை |
|---|---|---|---|---|---|
| S.யதுராகவி | A B C | 04 | S.சிவதனுசியா | B 2C | 32 |
| T.அங்கசன் | 2B C | 11 | B.சரணிகன் | 2C S | 39 |
| G.சிவாசன் | 2B C | 12 | K.விமலன் | 2C S | 41 |
| S.சாகித்தியா | 2B C | 13 | T.விஜிந்தா | 3C | 42 |
| M.குயின்சியா | 2B C | 15 | M.பவனிதன் | 3C | 46 |
| S.தர்சிகன் | 2B C | 16 | S.ஜெனிபர் சாரா | 3B | 10 |
| K.விதுர்ஷனா | 2B C | 18 | Y.நவின் | 2B C | 12 |
| S.கஸ்வினி | B 2C | 21 | S.ஹம்சிகா | 2B C | 15 |
| J.பகின்சனா | 2B C | 25 | B.அகர்கான் | B 2C | 18 |
| S.ஜதுஷா | 3C | 26 | I.றியாஸ் | 3C | 11 |
| S.விஷாகன் | 3C | 30 | M.ஆதிரா | 2C S | 18 |

(4060)

A/L 2024 REPEAT BATCH
A/L 2026 புதிய பிரிவு
ஆரம்பம்
30.04.2025 புதன்கிழமை மாலை 3.30மணிக்கு

077 170 1549 விரசிங்கம் மண்டபம், 03ஆம் மாடி, யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தினால் இல.191, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 29.04.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.